பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 32 வெள்ளிக்கிழமை 16.07.2021 கதிர் 253

### இது ரகசியம் அல்ல!

அரசின் உயர்மட்டத்தில் ஒரு வருடன் பேசினேன்.

வடக்கில் அரச நிர்வாகத்தின் போக்குக் குறித்து அரசுத் தலைமை கடும் எரிச்சலில் இருப்பது புரிந்தது.

பலதலைகள் பதவியில் இருந்து உருளப் போவது

பக்கம்02

## வல்வெட்டித்துறையில் நேற்றும் 40 பேருக்குக் கொரோனா உறுதி

### மூன்று நாள்களில் மட்டும் 88 பேருக்குத் தொற்று

(வடமராட்சி நிருபர்)

யாழ்., வல்வெட்டித்துறையில் நேற்று மேலும் 40 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை வடமேற்கு கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 209 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட

☞2

## யாழில் மேலும் இருவர் கொரோனவால் மரணம்

யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

சுழிபுரத்தைச் சேர்ந்த 33 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று அதிகாலை ஒரு மணிக்கு உயிரிழந்துள்ளார்.

அத்துடன் நேற்றிரவு 8 மணிக்கு சுழிபுரத்தைச் சேர்ந்த 72 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இருவரும்

☞2

# கொரோனா தொற்று பரவலால் பருத்தித்துறை நகரம் முடக்கம்!

### ★வங்கிகள் தவிர்ந்த ஏனைய அனைத்தும் பூட்டு
### ★மருதடியிலுள்ள டிப்போவிலிருந்து பஸ் சேவை

(வடமராட்சி நிருபர்)

யாழ்., பருத்தித்துறை நகரம் நேற்று மாலை முதல் மறு அறிவித்தல் வரையும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதாரத் தரப்பினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஜே/401 கிராம சேவகர் பிரிவு முற்றாக முடங்கியுள்ளது.

குறித்த பிரதேசத்தில் மருந்தகங்கள் உட்பட வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. வங்கிகள் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் திறக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

☞2

## தமிழ் அரசியல் கைதிகள் இருவருக்குக் கொரோனா

(இ.கலையமுதன், எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது எனக் குரலற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

குறித்த அமைப்பு ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொரோனாத் தொற்று

☞2

## 'டெல்டா' அபாய வலயமாக கொழும்பு நகர் அடையாளம்

### யாழ்ப்பாணம், கிளிநொச்சியிலும் தொற்றாளர்கள்

கொடிய 'டெல்டா' வைரஸ் பரவல் அபாய வலயமாக கொழும்பு நகரம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரை அண்மித்தபகுதிகளில் 'டெல்டா' வைரஸ் தொற்றுடன் மேலும் 14 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொழும்பு

☞2

## நாடு திரும்பிய திகாம்பரம் எம்.பி. சிறிகொத்தவில் இரகசியப் பேச்சு

தனிப்பட்ட தேவைக்காக வெளிநாடு சென்றிருந்த தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி., நாடு திரும்பிய நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவுக்குச்

☞2

## 1,447 பேருக்கு தொற்று

நாட்டில் மேலும் 1,447 பேர் புதிய தொற்றாளர்களாக நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

☞2

## 50 பேர் காவு

இலங்கையில் மேலும் 50 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல்

☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாற்றப்படப் போவது – நிச்சயம் எனத் தெரிகின்றது. அதில் ஆளுநரும் அடங்குவார். அடுத்த தலைகள் யார் என்பது இன்னும் உறுதியாகவில்லை.

ஆளுநர் இப்போதைக்கு மாற்றப்பட வாய்ப்பில்லை என்ற எனது நேற்றைய தகவல் தவறு என்றே தெரிகின்றது.

அலரி மாளிகை பிரதமரின் உத்தியோகபூர்வ நிலையம் என்றாலும் அதையொட்டி அமைக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பு அலுவலகத்தை மையமாக வைத்துத்தான் புதிய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் இயங்கி வருகின்றார்.

அலரி மாளிகைக் கட்டமைப்புக்கு நெருங்கிய ஒருவரே வடக்கு மாகாண ஆளுநராக வருவார் எனத் தெரிகின்றது. ஓரளவு விடயம் உறுதியானதும் வெளிப்படுத்துவேன்.

உருளப்போகும் அடுத்த தலை யார் என்பதும் ஓரளவு தெரியும். ஆனால் சமயம் வரும் போது கூறலாம்.

நேர்மையான – உறுதியான – வெளிப்படையான – அரச நிர்வாகம் ஒன்றை வடக்கில் ஆட்சித் தலைமை எதிர்பார்த்தது என்றும் –

இப்போதைய கட்டமைப்பில் திருப்தி தரக் கூடியதாக அது இல்லை என்றும்–

ஆட்சித் தலைமை கருதுகின்றது என்பது புரிந்தது.

முக்கியமாக அரசியல்வாதிகளின் தேவையற்ற தலையீடுகளுக்கு இடம் கொடுத்து, நலிந்து நின்று, நிர்வாகத்தைக் கோட்டை விட்ட அதிகாரிகள் பொறுப்பில்லாக் கதிரைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்பது உறுதியாகத் தெரிகின்றது.

★ ★ ★

கோட்டாபய ராஜபக்ஷவின் அரசில் ஜனாதிபதிக்கு அடுத்த – பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நிகராக – நிதி அமைச்சர் பதவியில் பஸில் ராஜபக்ஷ வந்து அமர்ந்து விட்டார். ஆயினும் இன்னும் உள்வீட்டுக் குழப்பம் ஓய்வுக்கு வரவில்லை. தொடருகின்றது.

வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில்லவிடம் நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் – எதிரணியின் – எம்.பி. ஒருவர் கேள்வி எழுப்பினார்.

*“திருகோணமலையில் இருக்கும் எண்ணெய்க் குதங்களை அமெரிக்காவுக்கு வழங்குவதற்கு முடிவு செய்யப்படிருப்பதாகக் கூறப்படுகின்றதே. அமெரிக்கப் பிரஜை ஒருவர் இலங்கையின் நிதி அமைச்சரானதும் இப்படி நடக்கின்றதா?”* என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அப்போது அக்கேள்விக்குப் பதிலளித்த கம்மன்பில்ல *“இங்கு அரசில் எனக்கு மேல் இருவர்தான் உள்ளனர். ஒருவர் – ஜனாதிபதி; மற்றவர் – பிரதமர்”* – என்று குறிப்பிட்டார். அதன் மூலம் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தங்களுக்கு ஒரு பொருட்டல்ல என்பதைச் சொல்லாமல் சொல்லியிருக்கின்றர் அவர்.

பஸில் ராஜபகஷ எம்.பியாக சத்தியப் பிரமாணம் செய்ய நாடாளுமன்றுக்குள் வந்த போது அச்சமயம் சபையில் இருந்த அமைச்சர்கள் வாசுதேவ நாணயக்காரவும் விமல் வீரவன்ஸவும் சபையை விட்டு வெளியேறினர்.

அண்மையில் இலங்கையின் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான கூட்டம் ஒன்றை அலரிமாளிகையில் கூட்டியிருந்தார் கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அதில் பங்கு பற்றினார். அப்போது பிரதமர் மஹிந்ததான் நிதி அமைச்சர்.

இரண்டு நாள்களில் நிலைமை மாறியது. நிதி அமைச்சு பிரதமரிடம் இருந்து பிடுங்கப்பட்டு, பஸிலிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதே அலரிமாளிகை மண்டபத்தில் நேற்று கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான கூட்டம் ஒன்றை புதிய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அழைத்திருந்தார். கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஒரு வாரத்துக்கு முன்னர் அந்தக் கூட்டத்துக்கு தாமே அழைப்பு அனுப்பி, பிரதமரையும் வைத்து கைத்தொழில் முயற்சியாளர்களின் கூட்டத்தை நடத்திய விமல் வீரவன்ஸ நேற்றைய கூட்டத்துக்கு மிஸ்ஸிங். அவர் முன்னரே திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்ச்சிக்காக அம்பாறைக்குச் சென்று விட்டார் என்று கூறப்பட்டது.

ஆக, பொதுஜன பெரமுனவில் – மொட்டுக் கட்சிக் கூட்டணியில் – பிய்ச்சல், பிடுங்கல், தொடர்கதையாக நீடிக்கின்றது என்பது உறுதி.

– மின்னல் –

## வல்வெட்டித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பி.சி.ஆர். பரிசோதனையில் நேற்று 40 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் வல்வெட்டித் துறை ஆதிகோவிலடி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் மூன்று நாள்களில் மட்டும் 88 பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## கொரோனா தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பருத்தித்துறை நகரில் இருந்த பஸ் தரிப்பிடம் மூடப்பட்டுள்ளதால் மருதடி பகுதியிலுள்ள டிப்போவிலிருந்து பஸ்கள் சேவையில் ஈடுபடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை 3ஆம் குறுக்குத் தெரு, தும்பளை வீதி, பத்திரகாளி வீதி, வீ.எம். வீதி, கடற்கரை வீதி, கொட்டடி வீதி அனைத்திலிருந்து நகருக்குள் உள் நுழைய முடியாது என்றும் சுகாதாரத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பருத்தித்துறை நகரமான ஜே/401 கிராம சேவகர் பிரிவில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தொற்றாளர்கள் சிலர் சட்டவிரோதமாக வெளியேறியுள்ளமையும் உறுதி செய்யப்பட்டுள்ளது. நகரப் பகுதி வியாபாரிகள் சிலரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். தொற்றாளர்கள் குறித்த பிரதேசத்தில் அதிக தடவைகள் நடமாடியுள்ளனர். இந்தப் பிரதேசம் அதிக கொரோனாத் தொற்று அபாயம் மிக்க பகுதியாக அடையாளம் காணப்பட்டதால் மறு அறிவித்தல் வரை முடக்கத் தீர்மானித்தோம் – என்றனர்.

## நாடு திரும்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சென்று முக்கிய சந்திப்பில் பங்கேற்றுள்ளார் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டாரவைச் சந்தித்து கடந்தகால மற்றும் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் திகாம்பரம் பேச்சு நடத்தியுள்ளார் எனவும் அந்த வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இன்னும் ஓரிரு நாட்களில் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரியவருகின்றது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கிய திகாம்பரத்துக்கு நல்லாட்சியின்போது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவி வழங்கப்பட்டது. 2015 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் யானை சின்னத்தின் கீழ்தான் திகாம்பரம் போட்டியிட்டார். 2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தொழிலாளர் தேசிய சங்கம் முற்போக்குக் கூட்டணியாக யானை சின்னத்தின் கீழ்தான் களமிறங்கியது.

எனினும், 2020 ஜனாதிபதித் தேர்தலில் திகாம்பரம் சஜித்துக்கு ஆதரவு வழங்கினார். பொதுத்தேர்தலில் தொலைபேசி சின்னத்தில் போட்டியிட்டார்.

தற்போது ஐக்கிய மக்கள் சக்திக்குள் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு குறிப்பாக மலையகத் தலைவர்களுக்கு உரிய இடமில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் ஐ.தே.கவுடன் திகாம்பரம் பேச்சு நடத்தியுள்ளமை அரசியல் களத்தில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

## தமிழ் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நான்காவது சுற்று சிறைச்சாலைக்குள் பரவத்தொடங்கியுள்ளது. அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நடேசன் தருமராசா என்ற தமிழ் அரசியல் கைதி கொரோனாத் தொற்றுக்கு ஆளாகி வெலிக்கடை சிறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்;பட்டிருந்த செல்லத்துரை கிருபாகரன் என்ற அரசியல் கைதிக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டு சிறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளை பொறுத்த மட்டில் இவர்கள் இரண்டாவது தடவையாக இந்தத் தொற்றுப் பாதிப்புக்கு ள்ளாகி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் மிக நீண்டகாலமாக சிறைத் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளதால் பல்வேறு வகையிலான நோய்நொடிகளால் பீடிக்கப்பட்டுள்ளார்கள்.

சிறைச்சாலைகளில் கைதிகளை பார்வையிடுவதற்கான சந்தர்ப்பமும் நிறுத்தப்பட்டுள்ளதன் காரணமாக அவர்களுக்கு போசாக்கான ஊட்டச்சத்து மிக்க உணவுகள் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் அற்று அவர்கள் உடல் உள ரீதியில் அதிக பலவீனம் அடைந்தவர்களாக இருக்கிறார்கள்.

நோயெதிர்ப்பு சக்தியை இழந்துள்ள இவர்களை மிக இலகுவாக தொற்று நோய்கள் பற்றிக்கொள்கின்றன. இந்த நிலை தொடருமானால் உயிராபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாயம் இருக்கிறது.

ஆகவே, தற்போது நாட்டுக்கு கணிசமான அளவு தடுப்பூசிகள் தருவிக்கப்பட்டு வருகின்றதன் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியம். அந்தவகையில், நெடுநாள் நோய் நொடிகளோடு சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு முன்னுரிமை அளித்து அவர்களை ஆபத்தில் இருந்து மீட்க வேண்டியது அரசின் கடமையாகும்.

கொழும்பு – புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நோய்வாய்ப்படுகின்ற நிலையில், அவர்களுக்கான சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதில் கடுமையான இடையூறுகள் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

மகசின் சிறைச்சாலை மருத்துவர்களால் மேலதிக சிகிச்சைக்கென பரிந்துரைக்கப்படுகின்ற தமிழ் அரசியல் கைதிகளை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சிகிச்சையினை பெற்றுக்கொடுப்பதற்கு சிறைத்துறை நிர்வாகம் பொருத்தமற்ற காரணங்களை கூறி வெறுமனே காலத்தை கடத்தி வருவதாக கைதிகள் கவலை தெரிவித்துள்ளனர். இதனால் அவர்களுக்கு நோய்த்தாக்கம் அதிகரித்து மிகுந்த வேதனைகளை அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

தமிழ் அரசியல் கைதிகள் கைதுசெய்யப்பட்ட காலங்களின் போது இவர்கள் சந்தித்த துன்புறுத்தல்களின் பிந்திய விளைவுகள் தற்போது வெளிப்படத் தொடங்கியுள்ளதாலும் போர்க்காலத்தின் போதான விழுப்புண் தாக்கங்களினாலும் அரசியல் கைதிகள் பல்வேறு வலி வியாதிகளுக்கு ஆளாகியுள்ளனர். அதாவது கட்புலன் செவிப்புலன் பாதிப்பு, சுவாசக் கோளாறு, ஒருதலைக்குத்து, சிறுநீரக பாதிப்பு இருதய நோய், குடல் அழற்சி, நீரிழிவு, முள்ளந்தண்டு பாதிப்பு ,முழங்கால் மூட்டு தேய்வு, ஆஸ்மா, மன அழுத்தம், தோல் நோய்கள் என்பவற்றால் அன்றாட பொழுதுகளை துன்பங்களோடு கழித்து வருகிறார்கள்

தமிழ் அரசில் கைதிகளை பொறுத்த மட்டில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான நீண்ட கால சிறைவைப்பு, துரித விசாரணையற்ற விளக்கமறியல், கடுமையான தண்டனை தீர்ப்புக்கள் என அனுபவித்து வரும் கஷ்டங்களுக்கு மேலதிகமாக இவ்வாறு மருத்துவ தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் துயரப்படுவது எத்ததனை கொடியது? இதனை மோசமான உரிமைய மீறல் செயற்பாடாகவே கருத வேண்டியுள்ளது.

அரசானது , தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் கரிசனை கொண்டுள்ளது எனத் தெரிவித்து வருகின்ற நிலையில் , இது போன்ற அடிப்படை பிரச்சனைகளுக்கு தீர்வினை காணாமல் இருப்பது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துகிறது.

சிறைத்துறையும் மருத்துவத்துறையும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் மாற்றான் தாய் மனப்பாங்குடன் நடந்து கொள்வதை நிறுத்த வேண்டும்.

அரசியல் கைதிகளுக்கு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளிப்பதில் ஏதேனும் நடைமுறை இடையூறுகள் காணப்படுமாயின், விசேட பாதுகாப்பு கட்டமைப்புக்களுடன் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அவர்களை மாற்றி யாழ் போதனா வைத்தியசாலையில் தேவையான சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முடியும்.

தமிழ் அரசியல் கைதிகள் எதிர்நோக்கும் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதிகள் அரசுடன் பேசித் தீர்வுகளைக் கண்டறிய வேண்டும் என வலியுறுத்துக்கின்றோம் – என்றுள்ளது.

## ‘டெல்டா’ அபாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாநகர சபையின் தலைமை மருத்துவ அதிகாரிருவன்விஜயமுனிகுறிப்பிட்டுள்ளார்.

உருமாறிய கொரோனா வைரஸ் வகைகள் பரவுவது கொழும்பு மாநகரிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் தீவிரமடைந்துள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உருமாறிய டெல்டா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்கள் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் மருத்துவ அதிகாரி ருவன் விஜயமுனி குறிப்பிட்டுள்ளார்.

டெல்டா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் பரிசோதனை முடிவுகள் சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும், உருமாறிய வைரஸ்கள் தொடர்பாக சுகாதார அமைச்சு மேலதிக ஆய்வுகளை மேற்கொள்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ‘டெல்டா’ வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 50 பேர் காவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திணைக்களம் அறிவித்துள்ளது.

29 ஆண்களும், 21பெண்களும் நேற்று முன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் 30 - 50 வயதுகளுக்கு இடைப்பட்ட 8 ஆண்களினதும், 4 பெண்களினதும் மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதில், 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 21 ஆண்கள் மற்றும் 17 பெண்களின் மரணங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி நாட்டில் கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 661 ஆக எகிறியுள்ளது.

## 1, 447 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 80 ஆயிரத்து 506 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, நேற்று 939 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 53 ஆயிரத்து 953 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## யாழில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளனர்.

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffa will entertain applications from qualified persons for the under mentioned post up to **28.07.2021.**

**Post of Temporary Research Assistants / Temporary Scientific Assistants "Lee Foundation Endowment for Orthopaedic Surgery - Professorial Surgical Unit Faculty of Medicine, University of Jaffna"**

| Post | Salary scale |
|---|---|
| Temporary Research Assistants | Rs.49,860/- (Fixed) pm |

Qualifications:-

1. Pre intern medical officers :
   Those who have completed the Final MBBS Examination.
   *Selection will be based on the order of Merit list.*

2. Para-Medical or Science based qualified graduates :
   I. A First or Second Class (Upper Division) in a Special Degree Examination in the relevant field.
   OR
   II. A Second class ( Lower Division) in a Special Degree Examination in the relevant field.
   OR
   III. An ordinary pass in the B.Sc Special Degree Examination in the relevant field.

**AND**

The graduates those who have an excellent track record on under undergraduate research, publications, IT skills, statistical analysis skills, and English Language skills.

| Post | Salary scale |
|---|---|
| Temporary Scientific Assistants | Rs.48,385 / - (fixed) pm |

Qualifications:-

1. Para-Medical or Science based qualified graduates :
   I. A First or Second Class (Upper Division) in a Special Degree Examination in the relevant field.
   OR
   II. A Second Class ( Lower Division) in a Special Degree Examination in the relevant field.
   OR
   III. An ordinary pass in the B.Sc Special Degree Examination in the relevant field.
   OR
   IV. An ordinary pass in the B.Sc General Degree Examination with a recognized postgraduate qualification in the relevant field.

**Note:** Having an excellent track record on undergraduate research, publications, IT skills, statistical analysis skills, and English Language skills will be given priority.

Perfected applications shall be sent to the **Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna.**

Application forms will be available in the University website http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf. Those who wish to send the application forms downloaded from the University website should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs. 100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880***(Ref number should be mentioned: 970000090000387)* of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs. 100 / - per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self - addressed stamped envelope 23x10 cm in size along with the paid Bank Slip to the above address. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA.**


# நிறுத்திவைக்கப்பட்ட வாகனத்துடன் மோதி பளையில் ஒருவர் பரிதாப சாவு



நேற்று (வியாழக்கிழமை) காலை பளை முல்லையடி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட முல்லையடி பகுதியில் நேற்று அதிகாலை வாகனம் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ஓட்டோ, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனத்தை அவதானிக்காது மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த மூவரில் ஒருவர் மரணமடைந்துள்ளார் என பளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் பொல்கஹவலை பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய கோசல என்பவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் அதில் பயணித்த மேலும் இருவர் காயமடைந்து பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffa will entertain applications from qualified persons for the under mentioned post up to **28.07.2021.**

**Post of Temporary Research Assistants "A.S.Thambiah Endowment Chair in Oncology - Faculty of Medicine, University of Jaffna"**

| Post | Salary scale |
|---|---|
| **Temporary Research Assistants** | **Rs.49,860/- (Fixed) pm** |

Qualifications:-

1. Should have the basic degree in the field of health care and having Undergraduate research experience in health research.
   I. A First or Second class (Upper Division) in a basic degree Examination in the relevant subject.
   **OR**
   II. A Second class ( Lower Division) in a basic degree Examination in the relevant subject.
   **OR**
   III. An ordinary pass in the B.ScSpecial Degree Examination in the relevant subject.
   **OR**
   IV. An ordinary pass in the B.Sc General Degree Examination with a recognized postgraduate qualification in the relevant subject

**Note :*Having research experience in the field of oncology will be preferable.***

Perfected applications shall be sent to the **Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna.**

Application forms will be available in the Faculty website **http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf.** Those who wish to send the application forms downloaded from the Faculty website should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs. 100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880** *(Ref number should be mentioned: 970000090000387)* of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs. 100 / - per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self - addressed stamped envelope 23x10 cm in size along with the paid Bank Slip to the above address.

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.
Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**14.07.2021**

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இராணுவ மயமாகும் கல்விமுறை

நாட்டை இராணுவமயப்படுத்தும் தனது மோசமான திட்டத்தைக் கேட்டுக் கேள்வியின்றி அனைத்துத் துறைகளுக்கும் விவஸ்தையின்றி விரிவுபடுத்துகின்றது – விஸ்தரிக்கின்றது – கோட்டா அரசு.

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து கடைசியில் மனிதரைக் கடிப்பது என்பது போல சிவில் நிர்வாக சேவையை இராணுவ மயப்படுத்திய கோட்டா அரசு தற்போது கல்வித்துறையிலும் இராணுவ மயப்படுத்தும் தனது கைங்கரியத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது.

ஏற்கனவே பாடசாலை அதிபர்களுக்கு இராணுவத் தொண்டர் சேவையில் குறுகிய கால பயிற்சி முகாமும் அதன் பின்னர் அவர்களுக்கு 'கப்டன்', 'மேஜர்' தர நிலை அறிவிப்பும் என்று பாடசாலைக் கல்வி நிர்வாகத்தையும் இராணுவ மயப்படுத்தும் ஒரு முயற்சி 2015 முந்திய ராஜபக்ஷ அரசில் முன்னெடுக்கப்பட்டமை தெரிந்ததே.

அதன் தொடர்ச்சியாக இப்போது உயர்கல்வித்துறையை இராணுவ மயப்படுத்தவும், உயர் கல்வியைத் தனியார் மயப்படுத்தும் திட்டத்தை இராணுவம் மூலம் கட்டவிழ்க்கவும் முயலுகின்றது கோட்டா அரசு.

அதற்காகக் கொண்டு வரப்பட்டிருப்பதே 'ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசியப் பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலம்' ஆகும்.

அதற்கு எதிராக எதிரணியினரும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், கல்வியாளர்களும் தொதித்தெழுந்து போராட வீதிக்கு வந்திருப்பது அந்தச் சட்டமூலத்தினால் நாட்டுக்கு விளையக் கூடிய கெடு பற்றிய அச்சத்தினால்தான்.

நாட்டின் உயர்கல்வித் துறையை – குறிப்பாக பல்கலைக் கழகக் கல்வி போன்றவற்றை – வழிப்படுத்தி, கண்காணித்து, நெறிப்படுத்துவது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவாகும்.

இது தவிர்ந்த சில அமைப்புகளும் உயர் கல்வித்துறையைக் கையாண்டு, கண்காணித்துப் பேணி வருகின்றன.

உதாரணத்துக்கு சட்டத்துறை. 'சட்டமாணி' பட்டங்களை இலங்கைப் பல்கலைக்கழகம் வழங்கினாலும், அதை ஒத்த ஒரு கல்வி முறையை இலங்கை சட்டக் கல்லூரி நடத்தி, கண்காணித்து 'சட்டத்தரணிகள்' பட்டத்தை அளிக்கின்றது.

அது போன்று, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு வெளியில் சில அமைப்புகள், உயர்கல்வியைக் கையாளுகின்றன. உதாரணத்துக்கு பொறியியல் துறைக்கு, பொதுநிர்வாகத் துறைக்கு, பட்டயக் கணக்காளர் துறைக்கு என உயர்கல்வி நிறுவனங்கள் உள்ளன. அவை தத்தமது துறைகளில் உயர் கல்வியைப் கையாளுகின்றன.

அதேபோன்று பாகாப்புத்துறையில் – இராணுவவியல் தொடர்பில் – உயர்கல்வியையும், பட்டங்களையும் வழங்கும் ஒரு கட்டமைப்பாக உருவாக்கப்பட்டதே கொத்தவாவலை பாதுகாப்பு அக்கடமி. அத்துறையில் – பாதுகாப்பு விவகாரங்களை ஒட்டி – உயர்கல்வியை வழங்கும் அதிகாரமும் அத்துறையில் அங்கீகாரமும் அதற்கு வழங்கப்பட்டன. நேரடியாக பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் இந்த உயர்கல்விப் பீடம் நேரடியாக இராணுவக் கட்டுப்பாட்டில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

பாதுகாப்புத் துறை என்று ஆரம்பித்த அந்த நிறுவனம், யுத்தத்தில் பாதிக்கப்படுவோருக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களுக்குப் பயிற்சி என்று குறிப்பிட்டு அகலக் காலைப் பரப்பத் தொடங்கியது.

இப்போது கோட்டாவின் இராணுவப்பிடிப் போக்கான அரசில் அது தனியான பல்கலைக்கழகம் போன்று நிலைமாற்றம் கொள்கின்றது.

புதிய சட்ட மூலத்தின் பிரகாரம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழ் வராமலேயே மருத்துவம் உட்பட பல்வேறு துறைகளுக்கான பட்டப்படிப்புகளைத் தன்பாட்டில் முன்னெடுத்துப் பட்டமளிக்கும் அதிகாரத்தையும் அதற்கான அங்கீகாரத்தையும் அரசின் மூலம் பெறுகின்றது அது.

அது மாத்திரமல்ல, தனியார் பல்கலைக்கழகம் போல வெளியாள்களிடம் நிதி அறவிட்டு, அதன் அடிப்படையில் உயர் கல்வியை வழங்கி அது பட்டமும் அளிக்கும் – இராணுவ, பாதுகாப்புத்துறைகளில் மட்டும் அல்ல, அனைத்துத் துறைகளிலும்.

இனிமேல், கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் படித்து எவரும் மருத்துவர்களாகவோ, விஞ்ஞான மாணியாகவோ, சட்டமாணியாகவோ வரலாம். கொஞ்சம் பணம் தேவைப்படலாம்.

ஆக, இந்தச் சட்டமூலத்தின் மூலம் உயர் கல்வித்துறைக்குள்ளும் இராணுவம் கோலோச்சப்போகின்றது. உயர் கல்வியும் பல்கலைக்கழக பட்டமளிப்பும் தனியார் மயப்பட்ட வணிகத்துறையாக – வர்த்தக விவகாரமாக – மாறப்போகின்றன. அவ்வளவுதான்.

# நாட்டில் ஒரே தடவையில் 100 நகரங்கள் அபிவிருத்தி!

### பிரதமர் மஹிந்த திடசங்கற்பம்



நீண்ட காலமாக நாட்டில் அபிவிருத்தி செய்யப்படாத 100 நகரங்களை ஒரே தடவையில் அழகுபடுத்தி அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்ற நகர அபிவிருத்தி அமைச்சின் முன்னேற்ற ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைக்கு அமைய பிரதான நகரங்கள் மற்றும் பிரதேச நகரங்களுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகளை குறைத்து, அனைத்து மக்களுக்கும் சமமான நகர வசதிகளை பெற்றுக்கொடுப்பதே இதன் நோக்கமாகும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் அகற்றுகை, சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் குறித்த கூட்டத்தில் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபை இதுவரை செயற்படுத்தும் 60 ஆயிரம் வீடுகள் திட்டத்தில் குறைந்த வருமானம் பெறுவோருக்காக நிர்மாணிக்கப்பட்டு வரும் 32 ஆயிரம் வீடுகளின் முன்னேற்றம் தொடர்பாகப் பிரதமர் இதன்போது கேட்டறிந்தார்.

கொலன்னாவ, டொரின்டன், புளுமெண்டல், பேலியகொட மற்றும் ஒறுகொடவத்த பிரதேசங்கள் மற்றும் கண்டி, குருநாகல், அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவையில் புதிதாக செயற்படுத்தப்படும் நடுத்தர வகுப்பினருக்கான வீடமைப்புத் திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

குறைந்த வருமானம் பெறுவோருக்காக மஹரகம, நுகேகொட மற்றும் கோட்டை ஆகிய பகுதிகளில் புதிதாக வீடமைப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றமையுடன், கோட்டை வீடமைப்புத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தனியார் முதலீட்டாளர்களுடன் இணைந்து மேலும் 12 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தற்போதுள்ள நடைபாதைகளுக்கு மேலதிகமாக 25 மாவட்டங்களில் புதிதாக மேலும் 28 நடைபாதைகள் நிர்மாணிக்கப்படும்.

கொழும்பு நகரிலுள்ள பண்டைய கட்டடங்களைப் புனரமைப்பது தொடர்பில் கவனம் செலுத்திய பிரதமர், குறித்த கட்டடங்கள் புனரமைக்கப்பட்ட பின்னர் அவற்றைப் பராமரிப்பது தொடர்பில் கவனம் செலுத்துமாறு அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

புனரமைப்பின் பின்னர் அந்தக் கட்டடங்கள் முறையாக பராமரிக்கப்படாவிடின் அவை மீண்டும் பழைய நிலைக்குத் தள்ளப்படும் எனப் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை இதுவரை நடுத்தர வருமானம் பெறுவோருக்காக 4 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்து வருவதுடன், அந்தத் திட்டம் 2024 ஆம் ஆண்டு நிறைவுபெறும் என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

# ஜனாதிபதி சட்டத்தரணிகள் புதிதாக ஏழு பேர் நியமனம்

நாட்டில் புதிதாக 7 பேர் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவி வகிக்கும் 7 பேரே இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, மிலிந்த குணதிலக்க, ஹரிப்பிரியா ஜயசுந்தர, விக்கும் ஆப்ரூ, ஷானக்க விஜேசிங்க, ரவிந்திர பத்திரனகே, நெரின் புள்ளே மற்றும் சேத்திய குணசேகர ஆகியோர் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி சட்டத்தரணிகள் விரைவில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர்.

## முல்லையில் வாள் வெட்டு பெண் ஒருவர் படுகாயம்

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட வள்ளுவர்புரம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) கும்பலொன்று வீடொன்றுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வள்ளுவர்புரம் கிராமத்தில் குடும்பஸ்தர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த இளைஞர் குழு அங்கிருந்த உந்துருளிகள், பொருள்களை அடித்து சேதப்படுத்தியுள்ளதுடன் வாள் வெட்டுத் தாக்குதல்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது 24 வயதுடைய இளம் குடும்பப் பெண் ஒருவர் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில் வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய 6 சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

போதைப்பொருள் தொடர்பில் இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு வாள்வெட்டாக மாறியுள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## தலைமறைவாகி இருந்த பப்பி தங்காலையில் கைது

கொழும்பு, ஜுலை 16

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த பிரதான சந்தேக நபர் ஒருவர் கடந்த புதன்கிழமை தங்காலைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பப்பி என அழைக்கப்படும் 36 வயதுடைய படகோட்டி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் ஒரு தொகை போதைப்பொருளை தனது படகில் அவர் எடுத்து வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது சில ஆயுதங்களையும் எடுத்து வந்தார் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

பல நாள்களாக தலைமறைவாக இருந்த குறித்த நபர் தொடர்பில் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்டு வந்த விசாரணைகளின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

இது எண்பதுகளின் முற்பகுதியில் நடந்த சம்பவம். அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். அவருடனும், சிவசிதம்பரம் போன்றோருடனும் செய்தியாளன் என்ற முறையில் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவுக்கு வலதுகரம் போல ஒரு காலகட்டத்தில் எஸ்.டி.சிவநாயகம் ஐயா செயற்பட்டார் என்பதையும், தமது மிக இளம் வயதில் 'சுதந்திரன்' பத்திரிகையின் ஆசிரியராக அவர் விளங்கினார் என்ப தையும் நான் அறிந்திருந்தேன். அப்போது கட்சிக்குள் அமிர்தலிங்கத்தை விட சிரேஷ்ட நிலையில் இருந்தார் எஸ்.டி.எஸ்.ஐயா. ஐம்பதுகளின் பிற்பகுதியில் நடந்த திருகோணமலை யாத்திரையை அவரே முன்னின்று ஒன்றிணைத்து வெற்றிபெற வைத்தார் என்பதையும் அறிந்திருந்தேன்.

ஒரு நாள் அமிர்தலிங்கம் குறித்தும் அவரது கம்பீரப் பேச்சுக் குறித்தும் நான் குறிப்பிட்டபோது –

*"உம்முடைய அமிர்தலிங்கத்தை அடுத்த முறை சந்திக்கும் போது அவருக்கு உத்தரியம் அணியப் பழக்கியவர் யார் என்று கேளும். நான் என்று பதில் சொல்லுவார்"* என்றார் எஸ்.டி.எஸ். ஐயா.

பெரும்பாலும் பட்டுவேட்டிக்கு மெல்லிய மடிப்புக் குலையாமல் தோளில் அணியும் சால்வைதான் உத்தரியம். மடிப்புக் கலையாமல் கழுத்தைச் சுற்றி தோளில் உத்தரியம் அணிவது ஒரு கலை.

ஓரிரு நாள்கள் கழித்து அமிர்தலிங்கத்தை ஒரு செய்தியாளர் கூட்டத்தில் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. அவருடன் தனியப் பேச சந்தர்ப்பம் கிட்டியபோது



உத்தரியம் தரித்த அமிரின் இளமைப் படம். எஸ்.டி.எஸ். ஐயா காலமான பின்னர் அவரது துணைவியார் மங்களம் அம்மா என்னிடம் ஒப்படைத்த ஐயாவின் ஆவணங்களில் இதுவும் இருந்தது. அதனால் இதுதான் முன்னர் ஐயா குறிப்பிட்ட படம் என்று நினைக்கிறேன்.

நான் மெல்ல விடயத்தை அவிழ்த்தேன்.

*"உங்களிடம் ஒரு விடயம் கேட்கலாமா?"* என்றேன் நான்.

துடுக்காகப் பதில் தந்தார் அமிர்.

*"நீங்கள் எதுவும் கேட்கலாம் தம்பி. 'தினபதி'க்கு மறைக்க என்னிடம் எதுவும் இல்லை"* என்று நையாண்டித்தனமாகப் பதில் தந்தார் அவர்.

*"இது செய்தியல்ல. வேறு விடயம்...!"* என்று இழுத்தேன் நான்.

*"சொல்லுங்கள்!"* என்றார் அமிர்.

*"உங்களுக்கு உத்தரியம் அணியப் பழக்கியவர் தாமே என்று எங்கள் ஆசிரியர் கூறுகின்றாரே. உண்மையா....?"* என்று பட்டவர்த்தனமாகக் கேட்டேன் நான்.

அமிர் சிரித்தார். அதில் பழைய நினைவுகளின் நிறைவை – சம்பூரணத்தை – திருப்தியை – நான் அவதானித்தேன். தம்மையும், தமது தமிழர் விடுதலைக் கூட்டணியையும் காட்டமாக விமர்சிக்கும் எஸ்.டி.எஸ். குறித்து அப்போது அவரது பேச்சில் எதிர்த்தனம் இருக்கவில்லை. நட்புறவுப் பாணி – நெருக்கம் – தோழமைஉணர்வு – அச்சமயம்நடந்தஉரையாடலில் பீறிட்டமையையும் நான் அவதானித்தேன். நான் குறிப்பிட்ட விடயம் அமிரின் மனதைத் தொட்டு விட்டது என்பதை நான் உணர்ந்தேன்.

*"உங்கள் ஆசிரியர் அப்படிச் சொன்னாரா? அது உண்மைதான். உங்கள் ஆசிரியர் படம்பிடிப்பதில் ஒரு விற்பன்னர். நான் இளைஞனாக அரசியலுக்கு வந்தபோது சுதந்திரனில் என் செய்திகளையும் படங்களையும் பிரசுரித்து என்னைத் தூக்கி விட்டவர். அரசியலுக்காக வந்த இளைஞன் அமிர்தலிங்கத்தின் முதல் படத்தை பல போஸ்களில் அவர்தான் பிடித்தார். அப்போதுதான் நான் 'நஷனல்' போட்டு உத்தரியம் அணிந்து அந்த படத்தைப் பிடித்தேன். படத்தில் நஷனலுக்கு மேல் உத்தரியம் போடுவது எப்படி என்று தடுமாறிய போது அவர்தான் அழகாக மடித்து தோளைச் சுற்றி 'ஸ்மாட்டாக' அணிவித்து, அந்தப் படத்தை எடுத்தார். அது பின்னர் சுதந்திரனிலும் பிற பிரசுரங்களிலும் தாராளமாக வெளிவந்தது."* – என்று தொடங்கி, அந்த நேரத்துக் கதைகள் பலவற்றை சுருக்கமாக நினைவு கூர்ந்தார் அமிர்.



மரண தண்டனைத் தீர்ப்பின் பின்னர் நீதிமன்றத்திலிருந்து கூட்டிச் செல்லப்படும் குட்டிமணியும் ஜெகனும். வெள்ளை உடையில் இருக்கும் குட்டிமணி என்னை நோக்கி நடந்து வந்தபோது எனக்கு அருகில் நின்ற எங்கள் பத்திரிகைப் படப்பிடிப்பாளர் பிடித்த படம் இது.

அங்கம் 15

ஒரு ஐந்து அல்லது பத்து நிமிடம் தான் அன்று அந்த விடயத்தை ஒட்டி அமிர்தலிங்கம் அவர்களோடு பேசியிருப்பேன். அரசியலுக்கு அப்பால் – கொள்கை நிலைப்பாடுகளுக்கு அப்பால் – அமிர்தலிங்கத்துக்கும், எஸ்.டி.சிவநாயகம் ஐயாவுக்கும் இடையில் பிரிக்க முடியாத ஓர் ஒட்டுணர்வு, நட்புரிமை இருந்தது, இருக்கின்றது என்ற மனவுணர்வு எனக்கு ஏற்பட்டது.

அலுவலகம் சென்றதும் நேராக எஸ்.டி.எஸ்.ஐயாவின் அறைக்குச் சென்றேன். நடந்தவற்றை விவரித்தேன்.

*"அப்படியா?"* என்று நெகிழ்வுடன் செவிமடுத்தார். அரசியல் ரீதியாகக் கருத்து வேறுபாடுகள் கொண்ட உங்களுக்குள் ஆத்மார்த்தமான பரஸ்பர நல்லெண்ணம் உண்டு என்பதைப் புரிந்து கொண்டேன் என்பதை எனக்குத் தெரிந்த தமிழில் என் கருத்தாக முன்வைத்தேன்.

அதற்கும் *"அப்படியா?"* என்று கேட்டுச் சிரித்தார் சிவநாயகம் ஐயா. ஆயினும் அவர் கண்கள் பனித்தமை என் மனதில் ஆழமாகப் பதிந்தது.

அமிர்தலிங்கம் அரசியல் ஜாம்பவானாக பிற்காலத்தில் உயர்ந்தவர். எஸ்.டி.எஸ். ஐயா ஊடக ஜாம்பவான்.

இரண்டு ஜாம்பவான்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள், மோதல்கள், அரசியல் காழ்ப்புணர்வுகள் ஆழமாக வேரோடிக் கிடந்த போதிலும், அதையும் தாண்டிய இளமைக் கால நட்புணர்வு இறுக்கம் அவர்கள் இருவரின் மனதிலும் ஆழ வேரூன்றியிருந்தமையையும் நான் அவதானிக்க முடிந்தது. பெரிய மனிதர்கள், பெரிய மனிதர்கள்தாம்!



எஸ்.டி.எஸ். இளைஞராக...

* * *

இனி நேற்று விட்டுச் சென்ற இடத்தைத் தொட்டு ஆரம்பிப்போம்.

*"பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகித் தடுத்து வைக்கப் பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் வழக்கு விசாரணைச் செய்திகள் தடையின்றி வெளிவருவது தமிழ் மக்களுக்கும் மிக முக்கியமானது; அந்தக் கைதிகளுக்கும் முக்கியமானது. இரண்டு பத்திரிகைகளே – 'தினபதி' மற்றும் 'வீரகேசரி' – ஆகியவையே அதனை முன்னெடுத்து வருகின்றன. அந்தச் செய்திகளை எழுதி வெளிப்படுத்தும் செய்தியாளர்கள் 'பயங்கரவாத நடவடிக்கையுடன் தொடர்புடையவர்கள்' என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டால் அந்தச் செய்திகள் வெளியாவதும் தடைப்பட்டு விடும். அப்படி ஒரு நிலைமை ஏற்படுத்துவதற்கு அரசு தரப்பு பார்த்திருக்கின்றது. அதற்கு இடம்கொடுப்பது போல நாம் நடந்து கொள்வதா? என்று சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் கேளுங்கள்"* – என்றார் எஸ்.டி.எஸ்.ஐயா.

கொழும்பு புல்லர்ஸ் வீதி, குயின்ஸ் கிளக் கட்டடத்தில் உள்ள விசேட மேல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப் படும் – பயங்கரவாதச் சட்டத்தின் கீழ்

ந.வித்தியாதரன்

தொடுக்கப்பட்ட – வழக்குகளைத் தினசரி அவதானிப்பதற்கு நீதிபதி, சட்டத்தரணிகள், நீதிமன்ற ஊழியர்கள், பாதுகாப்புப் படை வீரர்கள் தவிர வெளியாள்கள் என இரண்டே இரண்டு பேர்தான் அனுமதிக்கப்படுகின்றார்கள். 'தினபதி', 'வீரகேசரி' செய்தியாளர்கள் அவர்கள். இரண்டே இரண்டு பேர் என்பதால் அவர்கள் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பு மிகக் கவனமாக அவதானம் செலுத்தி வருகின்றது என்ற கள யதார்த்தத்தை சம்பந்தப்பட்டோருக்கு விளக்கமாகக் கூறும்படி எஸ்.டி.எஸ்.ஐயா வழிப்படுத்தினார்.

நேரம் கிடைக்கும் போது நீதிமன்றத்துக்குள் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்றோரிடம் இவற்றை எடுத்துரைத்தேன். அவர்கள் புரிந்து கொண்டார்கள். வழக்கு விசாரணைகளின் விவரம் ஊடகங்களில் – இரண்டு பத்திரிகைகளிலும் – விலாவாரியாக வருவது அவர்களுக்குப் பிடித்திருந்தது. அது தடைப்படாமல் தொடர்ந்து நடக்க வேண்டும் என்பது அவர்கள் விருப்பமாகவும் இருந்தது.

அதனால், இடை ஊடாட்டத்துக்காகப் பத்திரிகையாளர்களைப் பயன்படுத்த முயல்வது பத்திரிகையாளர்களுக்கும் சிக்கலைத் தந்து எதிர்காலத்தில் அந்தக் கைதிகள் தொடர்பான நீதிமன்றச் செய்திகளை வெளியிட முடியாத நிலைமையை ஏற்படுத்தி விடும் என்ற களநிலைமை அவர்களுக்குப் புரிந்தது.

ஆகவே, என்னை அணுகும் தரப்பிடம் என் மூலம் ஊடாட்டம் செய்வதை தாங்களே விரும்பவில்லை என்று கூறும்படி குட்டிமணி, தங்கத்துரை போன்றோர் தெரிவித்தனர்.

அப்படியே செய்து அந்தப் பொறுப்பிலிருந்து என்னை ஒருவாறு விடுவித்தும் கொண்டேன்.

தமது ஆலோசனை சரி வந்தமை குறித்து எஸ்.டி.எஸ்.ஐயாவுக்கும் திருப்தி.

எனினும், சட்டத்தரணிகள் மூலம் இந்த ஊடாட்டம் தொடர்ந்தமையை நான் அறிந்திருந்தேன். ஆனாலும் அவற்றில் நான் சம்பந்தப்படவில்லை.

அந்த நீதிமன்றச் செய்தியாளன் பணியை 1983 ஜூலைக் கலவரம் வெடிக்கும் வரை நான் தொடர்ந்தேன். ஆனாலும் அதற்கு முன்னர், இடைநடுவில் 'போஸ்ட் பியோன்' ஆகப் பணியாற்றும் வேலையிலிருந்து எப்போது என்னை விடுவித்துக் கொண்டேன் என்பது எனக்குச் சரியாக நினைவில் இல்லை. ஆனால் கடைசிக் கட்டத்தில் அந்தச் சிக்கலில் இருந்து நான் முற்றாக விலகிக் கொண்டிருந்தேன் என்பது நினைவில் உண்டு.

1982 ஒகஸ்ட் 13 ஆம் திகதி கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கில் குட்டிமணிக்கும் ஜெகனுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க...)

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 10 | விஞ்ஞானம் | அலகு 07

## மூலகங்களினதும் சேர்வைகளினதும் அளவறிதல்

**01. a)**

i) சாரணுத் திணிவு என்றால் என்ன?

ii) ஹீலியம் அணுவின் சாரணுத் திணிவு 4 என ஆசிரியர் ஒருவர் கூறுகின்றார். இதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

iii) A எனும் அணுவின் திணிவானது காபன் சமதானியின் (12 C )அணு ஒன்றின் திணிவின் 7மடங்காகும். Aயின் சாரணுத் திணிவு யாது?

iv) ஒட்சிசன் அணு ஒன்றின் திணிவு $2.66 \times 10^{-23}$g ஆகும். காபன் அணு ஒன்றின் ($^{12}_{6}$c) திணிவு $1.99 \times 10^{-23}$g ஆகும். ஒட்சிசனின் சாரணுத் திணிவு யாது?

**b)**

i) சார்மூலக்கூற்றுத் திணிவு என்றால் என்ன?

ii) சார்மூலக்கூற்றுத் திணிவிற்கான சமன்பாட்டைத் தருக?

iii) பின்வரும் சேர்வைகளின் சார்மூலக்கூற்றுத் திணிவைக் கணிக்க?

1) $C_6H_{12}O_6$ (குளுக்கோஸ்) -

2) $H_2SO_4$ (சல்பூரிக் அமிலம்) -

3) $H_2O$ (நீர்) -

4) $CO_2$ (காபனீரொட்சைட்) -

சாரணுத் திணிவு - C - 12, S - 32, H - 1, O - 16

**C)**

i) அவகாதரோ மாறிலி எனும் பதத்தை விளக்குக?

ii) மூலர் திணிவு என்றால் என்ன?

iii) $H_2$ வாயுவின் சார் மூலக்கூற்றுத் திணிவு 2g ஆகும். 6g $H_2$ வாயுவை எடுத்தால் அதில் காணப்படும் மூலக்கூறுகளின் எண்ணிக்கை யாது? (அவகாதரோ மாறிலி = $6.022 \times 10^{23}$)

iv) Mg அணுவன் சாரஅணுத் திணிவு 24ஆகும். Mg எடுத்தால் அதில் காணப்படும் Mg அணுக்களின் எண்ணிக்கை யாது?

**d)**

i) மக்னீசியத்தினி மூலத் திணிவு $24gmol^{-1}$ ஆகும். 10g மக்னீசியத்தில் உள்ள பதார்த்தத்தின் அளவை முலில் கணிக்க?

ii) $H_2O$ இன் மூலத் திணிவு $18gmol^{-1}$ ஆகும். 5mol $H_2O$இன் திணிவைக் கணிக்க?

iii) 10mol $CO_2$வின் திணிவானது ஆய்வு கூடத்தில் 440g என அறியப்பட்டது. எனவே $CO_2$ முலர் திணிவைக் காண்க?

iv) பின்வரும் சேர்வைகளின் சார்மூலக்கூற்றுத் திணிவைக் காண்க?

1. $C_8H_{18}$ -
2. $CCl_4$ -
3. $CS_2$ -
4. $CH_3COOH$ -

சாரணுத் திணிவு (C - 12, H - 1, O - 16, S - 32, Cl - 35)

ஆக்கம் - வி.டினோஜன்

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 09 | விஞ்ஞானம் | அலகு 09

## அங்கிகளில் நிகழும் கூர்ப்புச் செயன்முறை விடைகள்

**புவியின் தோற்றுவாய்**

1. 45 மில்லியன்
2. நெபியுலாக் கோட்பாடு
3. அகிலத்தில் பரம்பிக் காணப்படும் கூப்பொருள் துணிக்கைகள் ஈர்ப்பு விசை காரணமாக ஒன்று சேர்ந்து திண்மமாவதன் மூலம் வெள்ளுடுத் தொகுதிகள், சூரியன் ஏனைய கோள்கள் உருவாகியுள்ளன.
4. பெருவெடிப்புக் கொள்கை (Big Bang theory)
5. ஆரம்பத்தில் அகிலமானது அதிகளவு சக்தியை உள்ளடக்கிய சக்தி முதலாக கருதப்பட்டது. அதில் பெருமளவு வாயுக்கள், தூசித் துணிக்கைகள் திண்மங்களாகியும் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகியும் வெள்ளுடுத் தொகுதிகளாக உருவானது.
6. வெள்ளுடுத் தொகுதியுள்ள பால் வீதியில் ஞாயிற்றுத் தொகுதி உருவாகியமையை
7. ஆரம்பத்தில் புவியானது அதிக வெப்பமுடைய உருகிய பாறைக் குழம்பாலாக் கப்பட்ட உக்கிரமான பாரிய உரிமலைச் செயற்பாடுகளுடன் கூடிய கோளாமாகக் காணப்பட்டது. பின்னர் படிப்படியாகக் குளிர்ச்சியடைந்து ஆவிப்பறப்புக் குறைந்த அடர்த்திகூடிய உலோகங்கள் ஒடுங்கி திண்மமாகி புவியின் அகணி உருவாகியது. இதனைத் தொடர்ந்து பாரம் குறைந்த சிலிக்காப் பாறைகளால் புவியின் மேலோடு உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.
8. புவியின் மத்தியில் காணப்பட்ட பல்வேறு மூலகங்கள் ஒன்றோடொன்று தாக்கமுற்று பல்வேறு வாயு வகைகள் தோன்றின.
9. காபனீரொட்சைட் ($CO_2$), மெதேன் ($CH_4$), ஐதரசன் சல்பைட்டு ($H_2S$) போன்ற வாயுக்களால் ஆக்கப்பட்டிருந்தது.
10. ஆரம்பத்தில் புவியிற் காணப்பட்ட அதிக வெப்பம் காரணமாக புவியின் மீது நீரானது ஆவி நிலையில் காணப்பட்டு பின்னர் ஒடுங்கியதன் காரணமாக முகில்கள் உருவாகின. இம் முகில்களிற் காணப்பட்ட சிறிய நீர்த்துளிகள் ஒன்று சேர்ந்து மழையாகப் புவியில் விழ ஆரம்பித்தது. அதன் பின்னர் பல வருடக் கணக்கில் பாரிய மழைவீழ்ச்சியானது புவிமீது தொடர்ச்சியாகப் பெய்ததாகவும் அதன் காரணமாகக் கனியுப்புகள் நிறைந்த மழைநீர் புவியின் தாழ்வான பிரதே சங்களை நிரப்பியமையால் சமுத்திரங்கள் தோன்றியதாகவும் நம்பப்படுகிறது.

**9.2 புவியில் உயிரின் தோற்றம்**

1. 3.5 பில்லியன் வருடங்களுக்கு முன்
2. 1.சிறப்புப் படைப்புக் கொள்கை
   2.தன்னிச்சைப் பிறப்பாக்கக் கொள்கை
   3.அண்டவெளிக் கொள்கை
   4.உயிரிரசாயனக் கூர்ப்புக் கொள்கை
3. புவியிலுள்ள சகல உயிரினங்களும் இன்றுள்ளவாறே சர்வ வல்லமையுள்ள கடவுளினால் படைக்கப்பட்டது.
4. உயிரங்கிகள் உயிரற்ற பொருள்களிலிருந்து தன்னிச்சையாகத் தோன்றின.
5. அழுக்கான ஆடைக் குவியலிலிருந்து எலிகள் தோன்றுதல்,உக்கிய மரக்குற்றிக ளிலிருந்து கூன்வண்டுகள் தோன்றுதல் அழுக்கலடைந்த இறைச்சியிருந்து புளுக்கள் தோன்றுதல்.
6. லூயி பாச்சர்
7. பிரான்சிஸ்கோ ரெடி
8. பல பில்லியன் வருடங்களுக்கு முன் அங்கிகளுடன் கூடிய எரிகற்கள்/வேற்றுக் கிரக விண்வெளி ஊர்திக புவியை வந்தடைந்தன.
9. புவியின் ஆரம்பத்தில் வளிமண்டலத்திற் காணப்பட்ட வாயுக்கள் இரசாயனத் தாக்கங்களுக்கு உட்பட்டு உயிரி தோன்றுவதற்குத் தேவையான மூலகங்கள் உருவானது.
10. மின்னல் போன்ற மின்னிறக்கத் தாக்கங்கள் உக்கிரமான எரிமலை வெடிப்புகள், சூரியனிலிருந்துவரும் கழியூதாக் கதிர்கள்.
11. உயிரி தோன்றத் தேவையான மூலகங்கள் மழைநீரில் கரைந்து சமுத்திரங்களை அடைந்தன. இவ்வாறு சமுத்திரங்களை அடைந்த கலவை ஆதிக்கூழ் ஆகும்.
12. ஆதிக் கூழிலிருந்து உயிரிரசாயனத் தாக்கங்களின் விளைவாக
13. தனிக்கலத்தாலான, காற்றின்றிவாழ், பிறபோசணைக்குரிய அங்கிகளாக
14. தனிக்கல அங்கியான பற்றீரியா
15. சயனோ பற்றீரியா
16. ஒட்சிசன் வாயுவுடன் கூடிய வளிமண்டலம் தோன்றியது.
17. நிடாரியாக்கள், சிலவகை அளகிட்டுக்கள், ஆதியான ஆத்திரப் போடாக்கள்.
18. மீன்கள்
19. ஈருடகவாழிகள்
20. ஈருடக வாழிகள்
21. நகருயிர்கள்
22. பறவைகள், முலையூட்டிகள்
23. சுமார் 12 மில்லியன் வருடங்களுக்கு முன்னர்
24. சுமார் 5 மில்லியன் வருடங்களுக்கு முன்
25. சமுத்திரத்திலிருந்து தோன்றிய ஒளித்தொகுப்பிற்குரிய அல்காக்களிலிருந்து படிப்படியாக ஆரம்பத்தில் பூக்காத தாவரங்களும் பின்னர் நன்கு விருத்தியடைந்த பூக்கும் தாவரங்கள் தோன்றின.

**கூர்ப்பு**

1. ஆரம்ப காலத்து எளிய அங்கிகளிலிருந்து தற்கால சிக்கலான அங்கிகள் வரை அவற்றுள் ஏற்பட்டுள்ள படிப்படியான மாறல்கள் கூர்ப்பு எனப்படும்.
2. பூகோள விலங்கும் பரம்பல்களிலிருந்து (biogeography) பெறப்படும் சான்றுகள்., ஒப்பீட்டு உடலமைப்பியல் சான்றுகள், சுவட்டுக் கற்கைமூலம் பெறப்படும் சான்றுகள்

**உயிர் சுவடுகள்**

3. குறித்த விதத்தில் அங்கி/அங்கியின் உடற்பகுதிகள் அவற்றின் பாத அடையா ளங்கள் பாதுகாக்கப்பட்டுக் காணப்படும் குறித்த பிரதேசங்கள் உயிர்ச் சுவடுகள் எனப்படும்.
4. பாறைகளினுள் பனிக்கட்டிகளினுள் முற்றா நிலக்கரி (pest) எரிமலைச் சாம்பல் சேற்றுப் பாங்கான நிலங்களில்
5. 1. விலங்குகளின் என்புக் கூடுகள், பற்கள், ஒடுகள்
   2.விலங்கின் தோற்றத்துக்கு சமனான தோற்றமுள்ள உயிர்ச்சுவடு
   3.தாவர இரெசின்களினால் போர்க்கப்பட்ட பூச்சிகளின் புறவன்கூடு
   4.பனிக்கட்டிப் பாறையினுள் மீட்கப்பட்ட உடல் சுவடு உ+ம்-மமொத்து யானை
   5.பாதச்சுவடுகள் உ+ம்-டைனனோசர்

**வாழும் உயிர்ச்சுவடுகள்**

6. தற்காலத்திலும் வாழும் கூர்ப்பு ரீதியில் மிகப் பழைமையான தோற்றுவாயைக் கொண்ட அங்கிகள்
பல மில்லியன் வருடங்களாக பல்வேறு காலநிலை மாற்றங்களிற்கும் சூழல் மாற்றங்களிற்கும் முகம் கொடுத்தாலும் ஆரம்ப காலத்தில் காணப்பட்ட உடலியல் புகளை அவ்வாறே பேணியவாறு வாழும் கூர்பிற்குட்படாத அங்கிகள்.
7. சீலாகாந்த் மீனினம், இலாம்புச் சிப்பி, தும்பி, கரப்பான்பூச்சி, நுரையீரல் மீன், இராட்சத மரப்பன்னம்.
8. காபன் மூலகத்தின் ஒரு வடிவமான கதிர்த் தொழிற்பாட்டுக் காபனை பயன்படுத்தி
9. குதிரை

**9.4 உயிர்ப் பல்வகைமையில் கூர்ப்பின் முக்கியத்துவம்.**

1. 1 அங்கிகளிடையே வரையறுக்கப்பட்ட வளங்களுக்கான போட்டி குறையும்.
   2.உயிர்ப் பல்வகைமை விருத்தியடையும்
2. சார்ள்ஸ் டார்வின்
3. இயற்கைத் தேர்வுக் கொள்கை

ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)
யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.
வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்
ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.

# பசு வதையை முழுமையாக தடை செய்யும் சட்டமூலம்

நாட்டில் பசு வதையை முழுமை யாக தடை செய்வதற்கான சட்டமூலத் திற்கு சட்டமா அதிபரின் உறுதிப்பாடு கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இந்தச் சட்டமூலம் அடுத்துவரும் சில வாரங்களில் அமைச்சரவை அனுமதிக்காக முன்வைக்கப்பட உள் ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரி விக்கின்றன.

பௌத்த சாசன அமைச்சர் என்ற அடிப்படையில், பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷவின் யோசனைக்கு அமைய, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படு கின்றது. அமைச்சரவையின் அனுமதி கிடைத்த பின்னர், சட்டமூலத்தை வர்த் தமானியில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இதையடுத்து, ஏழு நாள்களின் பின்னர் குறித்த சட்டமூலம் நாடாளு மன்றில் சமர்ப்பிக்கப்பட்டு, நிறை வேற்றப்பட வேண்டும்.

# நடுநிலையான கருத்துக்களை ஊடகங்கள் வெளியிடவேண்டும்

## வியாழேந்திரன் பாய்ச்சல்



ஊடகங்கள் நடுநிலையான கருத்துகளை தெரிவிக்கவேண்டும், அதுவே அனைவருக்கும் ஆரோக்கியமானதாகும் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர்–

ஜனாதிபதியோ, பிரதமரோ, அரசாங்கத்தில் உள்ள பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களோ ஊடகங்களை அடக்கவேண்டும் எனக் கூறவில்லை. எதிர்க்கட்சியினர் தெரிவிக்கும் குற்றச்சாட்டுகளாகவே இதனை நாங்கள் பார்க்கின்றோம்.

ஜனாதிபதி எந்த இடத்திலும் ஊடகங்களை அடக்கவேண்டும், ஒடுக்கவேண்டும் எனக் கூறினார் என நான் அறியவில்லை. ஊடக சுதந்திரம் பேணப்படவேண்டும் என்பதில் ஜனாதிபதி மிகவும் கவனமாக இருக்கின்றார்.

ஜனநாயக ரீதியான போராட்டங்களை அரசாங்கம் ஒடுக்குவதாக எதிர்க்கட்சியினர் தான் குற்றங்களைச் சுமத்துகின்றார்கள். நாட்டிலே தற்போது கொரோனா சூழல் இருக்கின்றது.

இந்தக் கொரோனாச் சூழலுக்கு ஏற்ற வகையிலே நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தான் அரசாங்கம் பணிப்புரைகளை விடுத்து வருகின்றது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நிபந்தனையுடன் வர அனுமதி

கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்டுள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்ள நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது.

இதற்கமைய, நாட்டுக்குள் வந்த பின்னர் முதலாவது தினத்தில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதியாகவில்லையாயின் அவர்கள் இலங்கையின் எந்தப் பாகத்திற்கும் சுற்றுலா செல்ல அனுமதி வழங்கப்படும் என சுற்றுலா அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதேநேரம், சுற்றுலா மேற்கொண்டுள்ள 7 ஆவது தினத்தில், சுகாதார அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை நிலையத்தில் அவர்கள் மீண்டும் கொரோனாப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அனைத்து சுற்றுலாப் பயணிகளும் இலங்கை வருவதற்காக விமானத்தில் பயணிப்பதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதியாகவில்லை என்பதற்கான ஆவணத்தையும் வைத்திருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒரே நாளில் 3 லட்சத்து 84 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது

இலங்கையில் கடந்த புதன்கிழமை ஒரே நாளில் 3 லட்சத்து 84 ஆயிரத்து 763 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அதற்கமைய புதன்கிழமை 3 லட்சத்து 38 ஆயிரத்து 572 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாம் டோஸும் 35 ஆயிரத்து 410 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டன.

இதனையடுத்து, நாட்டில் இதுவரையில் 37 லட்சத்து 64 ஆயிரத்து 750 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாம் டோஸும் 11 லட்சத்து 83 ஆயிரத்து 391 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டன.

அதேநேரம், நேற்று 3 ஆயிரத்து 365 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸும் 7 ஆயிரத்து 416 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் முதலாவது டோஸும் செலுத்தப்பட்டன.

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கையில் பல இடங்கள் திறப்பு

இலங்கையில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக தற்போது பல இடங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன என இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

புனித பல்லின கோயில், பேரதெனிய தாவரவியல் பூங்கா, யாலதேசியப் பூங்கா, பின்னவலை யானைகள் சரணாலயம், ஹார்டன் சமவெளி தேசியப் பூங்கா, மின்னேரியா தேசியப் பூங்கா, மிரிச மற்றும் சிங்கராஜவனம் ஆகியவை இவ்வாறு திறக்கப்பட்டுள்ளன.

வனவிலங்கு பூங்காக்கள் மற்றும் ஏனைய இடங்கள் திறக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து, பார்வையாளர்களுக்காக பல தளங்கள் இப்போது திறக்கப்பட்டுள்ளன என இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

# ஜனநாயக விரோதச் செயற்பாடுகளில் அரசு ஆசிரியர் சங்க வவுனியா கிளை குற்றச்சாட்டு

ஜனநாயக முறையிலான ஆர்ப்பாட்டங்களை நசுக்கமுற்படுவதும், பெருந்தொற்றை காரணம்காட்டி, தனிமைப்படுத்தலிற்கு உட்படுத்துவதும், ஜனநாயக விரோதச் செயற்பாடென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் –

கொத்தலாவலை இராணுவ பல்கலைக்கழக சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்ற சுற்றுவட்டத்துக்கு அருகே இடம்பெற்ற கல்விசார் ஊழியர்களின் போராட்டத்தில் பங்கேற்ற இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் உட்பட பலர் கைது செய்யப்பட்டு அன்றைய தினமே நீதிமன்றால் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

எனினும் தனிமைப்படுத்தல் சட்டத்தைக் காரணம்காட்டி தன்னிச்சையான முறையில் ஜோசப் ஸ்டாலின் உட்பட குழுவினர் கட்டாயமாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை மிகவும் பாரதூரமான ஜனநாயக மறுப்பு நடவடிக்கையாக அமைகின்றது. இந்தச் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிப்பதுடன், அவர்களை விடுதலை செய்யுமாறு கோருகிறோம்,

இலங்கையின் அரசமைப்பு ஏற்றுக்கொண்டுள்ள தொழிற்சங்க உரிமைகளின் அடிப்படையிலேயே ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. இவற்றை நசுக்கமுற்படுவதும், கொரோனாப் பெருந்தொற்றைக் காரணம்காட்டி, தனிமைப்படுத்தலிற்கு உட்படுத்துவதும், ஜனநாயக விரோதச் செயற்பாடாகவே அமைகின்றது.

நிர்வாகத்துக்கு இடையூறு இல்லாமல் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமூக நீதிக்காக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட ஜோசப் ஸ்டாலின் உட்பட்ட குழுவினரைத் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிப்பதோடு தொழிற்சங்கங்களின் ஜனநாயக ரீதியான நடவடிக்கைகளுக்கு அனுமதியளிக்க வேண்டும் எனக் கோரி நிற்கின்றோம்.

அத்துடன் ஆசிரியர்களாகிய நாம் இதற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் அவர் விடுவிக்கப்படும் வரை மாணவர்களின் ஒன்லைன் வகுப்புக்களைப் புறக்கணிப்போம். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவுக்கு தடுப்பூசி தாமதமாகின்றமை ஏன்?

## மக்கள் கேள்வி

கொரோனாத் தடுப்பூசி வழங்கும் பணி நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வரும் நிலையில் வவுனியாவில் தொடர்ந்தும் தாமதிக்கப்படுவதாகப் பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

வவுனியா மாவட்டத்திற்கு சுமார் இரண்டு லட்சம் தடுப்பூசிகள் தேவைப்படும் நிலையில் அண்மையில் ஆயிரம் தடுப்பூசிகள் சில வைத்தியர்களின் கோரிக்கைக்கு அமைவாக இராணுவத்தினரால் வழங்கப்பட்டு 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு வழங்கப்பட்டிருந்தன.

அத்துடன் சுகாதாரத் துறையினர், ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் எனக் குறைந்தளவிலானோருக்கே வவுனியாவில் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஏனையோருக்குத் தடுப்பூசி வழங்குவதில் தொடர்ந்தும் காலதாமதம் நிலவி வருவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் ஆசிரியர்களுக்கான தடுப்பூசிகள் வழங்கப்படும் நிலையில் கொழும்பு போன்ற பகுதிகளில் 97 வீதமான ஆசிரியர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் வவுனியாவில் ஆசிரியர்களுக்கான தடுப்பூசி அதுவரை வழங்கப்படவில்லை. வவுனியா ஆசிரியர்கள் ஓரம்கட்டப்படுகின்றனரா என்ற கேள்வி எழுந்துள்ளதாகவும் மக்கள் குற்றம்சாட்டும் அதேவேளை இவ்வாறான விடயங்களுக்கு வவுனியாவில் சுகாதார அதிகாரிகள் எவரும் பதில் வழங்காமை சந்தேகத்தை எழுப்புவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அனைத்து மாவட்டங்களிலும் கொரோனா நிலைப்பாடுகள் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தல்கள் வழங்கப்படும் நிலையில் வவுனியா மாவட்டத்தில் பொறுப்பான சுகாதார அதிகாரிகள் எவரும் கருத்துக்கூறாமை ஏன் என்ற கேள்வியை எழுப்புவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற சுகாதாரத் தரப்பினர் தகவல்களை வழங்குவது மாத்திரமன்றி வவுனியா மாவட்டத்துக்குத் தடுப்பூசியின் முக்கியத்துவம் தொடர்பிலும் கொரோனாத் தடுப்பு செயலணிக்கு விரிவாக எடுத்துக்கூறி காரியத்தை சாதிக்க முனைப்புக் காட்ட வேண்டும் எனத் தெரிவித்துள்ளதுடன் வாய் மூடி மௌனியாக இருப்பதால் மக்களுக்கு எதனையும் செய்து விட முடியாது எனவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# மட்டக்களப்பில் விபத்து; மூன்று பேர் படுகாயம்

மட்டக்களப்பு – ஓந்தாச்சிமடத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த மூவரும் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி உபுல் குணவர்த்தன தெரிவித்தார்.

எருவில் கோடைமேடு கிராமத்தைச் சேர்ந்த இருவர் நேற்று (வியாழக்கிழமை) காலை 9.20 மணியளவில் அட்டாளைச்சேனைக்கு பயணித்தவேளை, ஓந்தாச்சிமடம் கிராமத்தின் உள்வீதியாக வந்த பெண்ணொருவர் பாதையைக் கடப்பதற்கு முற்படுகையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் 60 வயதுடைய வயோதிபத்தாய் மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்த 29, 53 வயதுடைய



இருவருமாக மூவர் படுகாயமடைந்து களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாக களுவாஞ்சிக்குடி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றார்கள்.

## மோட்டார் சைக்கிள் விபத்து; ஒரேநாளில் 10 பேர் மரணம்

நாடளாவிய ரீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை வெவ்வேறு வீதிகளில் இடம்பெற்ற விபத்துக்களில் 10 பேர் மரணமடைந்துள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் விபத்துக்களிலேயே 10 பேரும் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 67

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



**199. அவைதானா பிரபாகரனுக்கும் பாலசிங்கத்துக்கும் இடையே இருந்த வேற்றுமை?**

பாலசிங்கத்தின் அரசியல் யதார்த்தப் பார்வையும் பிரபாகரனின் இராணுவப் பார்வையும் அதன் பலத்திலிருந்த நம்பிக்கையும் ஒன்றுக்கு ஒன்று துணையாகப் போனாலும், நடைமுறையில் காரிய சித்திகளுக்கு இடைஞ்சல்கள் தந்தன.

விடுதலைப் புலிகளும், சந்திரிகா அரசும் கேட்டதற்கு இணங்க நோர்வே நேரடிப் பேச்சுகளில் ஈடுபட முன்னர் 1998, 1999களில் தனித்தனியாக சந்திரிகா, ஜி.எல். பீரிஸ், கதிர்காமரோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி, எது விதமான தீர்வை எதிர்பார்க்கிறார்கள் என ஒரு நோட்டம் பார்த்தார்கள். பின்னர் அவர்களைக் கூட்டமாகவைத்தும் பேசியதில் எல்லோருமே ஒரு நாட்டிற்குள், பெருமளவான அதிகாரப் பரவல் தமிழ் பகுதிகளுக்கு தருவதற்கு இணங்கினர். பிரிவினை என்பது இருக்கக் கூடாது என்பதே அவர்களது நிலை. அப்படியானால் அதை சிங்கள பெரும்பான்மையினரை ஏற்க வைக்க முடியாது என விளக்கப்பட்டது.

அதேபோல் பாலசிங்கத்துடனும், நீலன் திருச்செல்வத்துடனும் தனித்தனியாகப் பேசி, அரச பக்கத்து நிலைப்பாட்டை விளக்கி, எவ்வளவு பேசினாலும் அரசு இணங்கக் கூடிய தீர்வு எதுவரை போகும் என்பதை விளங்கப்படுத்தி, அந்த எல்லைகளுக்குள் தீர்வு அமைய இணங்குவீர்களானால் தாங்கள் ஈடுபடுவோம் என்று அறிவித்தனர்.

ஆகவே விடுதலைப் புலிகளோ, பிரபாகரனே தமிழ் ஈழத்தை எந்த வடிவில் பார்த்தாலும் அரசியல் யதார்த்தம் ஓரளவான வடிவை பாலசிங்கத்திற்கு தந்தது. அதனை பின் வந்த நாள்களில் சிறிது சிறிதாக மாவீரர் தினப் பேச்சுக்களில் தாயக கோட்பாடுகளை ஒட்டி. இரு தரப்புகளிடையேயும் ஓர் ஒற்றுமை வரலாம் என்று கருதி பாலசிங்கம் சில விடயங்களை புகுத்தினார். ஆனாலும் 'தமிழ் ஈழம்' என்ற வடிவம், பிரபாகரனுக்கு 'தனித் தமிழீழமாகவே' இருந்தது. பாலசிங்கத்திற்கு தாங்கள் எவ்வளவு தூரம் கயிற்றை இழுக்




கலாம் என்று தெரிந்தே இருந்தது. ஆனால் பிரபாகரனோ நீலன் திருச்செல்வம் தங்களை முந்திவிடலாம் என கணக்கெடுத்தார். பாலசிங்கம் இந்தப் பேச்சுகளை பிரபாகரனோடு, முன்னரே பேசியிருந்தாரோ என்பது அவர்களுக்குத் தான் தெரியும்.

**200. ஒஸ்லோவில் பாலசிங்கம் கையெழுத்திட்ட புரிந்துணர்வை பிரபாகரன் ஏற்றுக் கொண்டாரா?**

ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கு மேல் அவர் அதனைப் பற்றி தெரிந்து - அறிந்து கொண்ட விதம் அது, தன்னை மீறி நடந்ததான அபிப்பிராயத்தை அவருக்குத் தந்தது.

ஜூன் 27, 2002இல் லண்டனில் மிலிந்த மொரகொட பாலசிங்கத்துடனான பேச்சுக்களில் (1998, 1999 தவிர்ந்த) அதன் பின் நோர்வே, தாய்லாந்து என நான்கு சுற்றுப் பேச்சுகளிலும் ஒரு தீர்வை எப்படி நடைமுறைப்படுத்துவது, அடைவது என்றவற்றிலேயே காலம் கழிந்தது. பாலசிங்கத்துக்கும் கூட அது திருப்தியை தரவில்லை. ஜி.எஸ்.பீரிஸுடன் பேச்சுக்களில் எந்த திக்கில் தீர்வு போனாலும், எந்த வடிவிற்குள் இது தீர்க்கப்பட போவது என்பது தெரியவேண்டும் அல்லது அவற்றில் பிரயோசனமில்லை எனக் கோடி காட்டப்பட்டது. இருவரும் நோர்வேயுடன் முன்னர் பேசிய அடிப்படையில் கூட்டாட்சி (Federal ) முறையில் பேசலாம் என ஒத்துக்கொள்வதற்கு கையெழுத்திட இணங்கினர். இந்தப் பேச்சு சுற்றுக்களிலெல்லாம் கூடியிருந்த ஊடக நிருபர்களெல்லாம் என்ன நடக்கப் போகிறது என்று சூடான செய்திகள் தர ஆலாய்ப் பறந்து கொண்டிருந்தார்கள். எந்த திக்கில் தீர்வு போகிறது என்ற எந்த அசமாத்தமும் வெளிப்படவில்லை. பாலசிங்கத்தையும் மற்றவர்களையும் நோண்டிக்கொண்டே இருந்தார்கள்.

அப்படி ஆலாய்ப் பறந்தவர்களுக்குள் "உதயன்" நிருபருக்கு பாலசிங்கத்திடம் இருந்து சமஷ்டி அடிப்படையிலான ஒரு புரிந்துணர்வு நாளைய பேச்சில் இணங்கப்பட்டு அறிவிக்கப்படுகின்றது என்ற உள்வீட்டுத் தகவல் கிடைக்கிறது. அவர் அதனை உறுதியான செய்தியாக்கி ஊருக்கு அனுப்ப, அன்றிரவே அது "உதயனில்" தலைப்புச் செய்தியாகி விடியற்காலை கிளிநொச்சிக்குப் போய் பிரபாகரனின் கைகளிலும் சேர்ந்தது. தான் அனுப்பிய பேச்சுக்குழு சம்பந்தமாக நோர்வேயில் நடந்ததை - நடக்கவிருப்பதை - உதயனிலிருந்துதான் அவர் பார்த்தார். இப்படி நடக்கலாம் என அவர் அறியவில்லை. அவரிடம் கேட்கப்படவும் இல்லை.

ஒஸ்லோவிலோ உதயன் நிருபர் அங்கிருந்து செய்தியை அறிவித்த பின்னர்தான், விடுதலைப் புலிகளின் பேச்சாளர்களின் இக்கட்டை அந்தச் செய்தியாளரும் அறிந்தார்.

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வுக்கு இணங்குவது என்றும் –

அடுத்த நாள் அது குறித்து இருதரப்புகளும் இணைந்து அறிவிப்பு விடுப்பது என்றும் – தீர்மானிக்கப்பட்டது.

அன்று மாலை பேச்சு முடிந்ததும் அந்தத் தீர்மானத்தை ஒஸ்லோ பேச்சுத்தளத்திலிருந்து வன்னிக்கு தலைவர் பிரபாகரனுக்கு தெரிவிக்குமாறு தமிழ்ச்செல்வனிடம் பாலசிங்கம் கேட்டார்.

ஆனால் அதைப் பிரபாகரனுக்கும் அவரே சொல்ல வேண்டும் என்று கருணாவும், தமிழ்ச் செல்வனும் நிற்க அந்தத் திக்கு முக்காடல்களில் நேரம் போனது. அங்கு ஒஸ்லோவில் இரவு எட்டு மணி. வன்னியில் நள்ளிரவு தாண்டும் நேரம். அதனால், அடுத்த நாள் காலை பிரபாகரனுக்குத் தகவல் கூறிப் பேசலாம் என எல்லோரும் ஏற்றுக் கொண்டு ஒஸ்லோவில் படுக்கைக்குப் போகும் நேரத்தில் தான் இந்த நல்ல தகவல் உதயன் மூலம் தலைவருக்கு முன்னரே சென்று சேர்ந்து விடும் என்று அறிந்தார்கள். ஒஸ்லோவில் இருந்த உதயன் செய்தியாளரோடு நள்ளிரவு (இலங்கையில் விடியும் நேரம்) பாலசிங்கமே தொடர்பு கொண்டு அந்தச் செய்தி வெளியாகாமல் தடுக்க முயன்றாராயினும், அச்சமயத்தில் தலைப்புச் செய்தியுடன் அந்த விடயம் யாழ்ப்பாணத்தில் உதயனிலும் கொழும்பில் சுடர் ஒளியிலும் விநியோகத்துக்குச் சென்று விட்டமையையே அவரால் அறிய முடிந்தது.

அடுத்த நாள் அந்த இணக்கம் பற்றிய ஏற்பாட்டில் கருணாவையும் தமிழ்ச்செல்வனையும் கையெழுத்திட பாலசிங்கம் கேட்டும், அவர்களோ பிரபாகரனைக் கேட்காமல் தாங்கள் செய்யமுடியாது என தயங்க, பேச்சுக்கள் நடந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்க அறிவிப்பு செய்தியாளர் மாநாட்டில் தாமும் சேர்ந்து அமர்ந்திருந்து தலையசைத்தார் பாலசிங்கம்.



பின்னர் நடந்த பேச்சில் இவற்றை மறுதலிக்கவேண்டும் எனப் பிரபாகரன் விரும்பினார். ஆனால் பாலசிங்கமோ அது நடந்தது, அத்தோடு முன்னரான மாவீரர் நாள் பேச்சில் இப்படியான தீர்வுகளை ஏற்கலாம் எனப் பேசியிருக்கிறோம், நோர்வேயும் ஸ்ரீலங்காவும் அதனைப் பகிரங்கப்படுத்தியுள்ளன, ஆகவே மறுதலிப்பது புத்தியல்ல என அறிவித்துவிட்டு கிளிநொச்சியிலிருந்து வெளியேறினார் - திடீர் சுகவீனம் காரணம் எனக் கூறப்பட்டது.

(வளரும்........)

# கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!

18

- வே.வரதசுந்தரம் -

**சம்பந்தப் பாலகன்**
**பால்கேட் டழுதிடப்**
**பரிவு காட்டினாய்**
**ஆச்சிநீ காளி!**
**சாமகானம் பாடி**
**இராவணன் உய்ந்த**
**கோணமலைத் தாயே**
**ஆச்சிநீ காளி!**
**கவியரசன் கம்பன்**
**இராமகாதை பாடப்**
**பந்தம் பிடித்தனை**
**ஆச்சிநீ காளி!**

பத்திரகாளி அம்மன் வரலாற்றுச் சிறப்பினை இன்று நோக்க முன்னர், திருகோணமலை மண்ணில் ஆன்மீகப் பணியாற்றிய சுவாமி சிவானந்தரின் சீடர் சுவாமி சச்சிதானந்த யோகியார் ஆலய வழிபாட்டு மகத்துவம் பற்றிக் கூறுவதைச் செவிசாய்ப்போம். அதனைக் கேளீர்:-

'எங்கும் வியாபித்துள்ள கடவுளின் அருட்சக்தியை நாம் பெறுவதற்கு ஆலயம் அமைக்கப்பட்டிருக்கிறது. இறைவனுடைய தெய்வீகசக்தி எங்கும் நிறைந்திருக்கிறது. அச்சக்தி பூரணப் பொருளாய் எங்


சுவாமி சச்சிதானந்த யோகி

கும் நிறைந்திருப்பினும், இலகுவில் அதை எல்லோராலும் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. அங்கிங்கெணாதபடி எங்கும் நிறைந்திருக்கும் தெய்வீகசக்தி ஆலயத்தில் சேகரிக்கப்பட்டுப் பக்தர்களுக்குப் பயன்படுகிறது.

கும்பாபிஷேகத்தின்போது, உருவேற்றப்படுகின்ற தெய்வீக சக்தியினாலே சிற்பியினால் செய்யப்பட்ட வெறும் சொரூபம் வேதமந்திர சக்தியைப்பெற்று பூரணப்பொருளாக அருள்கொடுக்கும் மூர்த்தியாக அமைகிறது. தங்கம் அல்லது வெள்ளியினால் செய்த யந்திரத் தகடுகளிலும் இச்சக்தியைப் பாய்ச்சி மூர்த்திகளுக்கு அடியில் வைக்கின்றனர். அருள்நிறைந்த மூர்த்தியிடமிருந்து அடியார்கள் அருளைப் பெறுகின்றனர்."


கலாநிதி குணசிங்கம்,
பேராசிரியர் இந்திரபாலா பத்திரகாளி அம்மன் கோயிலில் கல்வெட்டு ஆய்வில் ஈடுபடல். அருகில் கல்வெட்டு தேடலார் தம்பிராசா

திருகோணமலை பத்திரகாளி அம்மன் கோயிலில் உள்ள முதலாம் இராஜேந்திரசோழன் காலத்துக் கல்வெட்டு இக்கோயிலின் தொன்மையை இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

திருகோணமலையின் தொன்மையை, தமிழர் வரலாற்றுத் தொன்மையைக் கூறும் கல்வெட்டு தேடலில் முன்னாள் சாம்பல்தீவு கிராமசபைத் தலைவர் வ.நா.தம்பிராசா ஆற்றிய பாரிய பங்களிப்பினைத் தமிழ் கூறும் நல்லுலகு மறக்க முடியாது. 'த ஐலண்ட்' பத்திரிகையின் திருகோணமலை நிருபராக இருந்தமையால் அன்னாருடன் நெருங்கிப் பழகியுள்ளேன். அன்னாருக்குக் கல்வெட்டுத் தேடலில் தணியாத வேட்கை இருந்ததை யானறிவேன்.

திருகோணமலையில் இந்து, தமிழ்ப் பாரம்பரியம், கலாசாரக் கூறுகளை வரலாற்று ரீதியாக நிர்ணயிக்கவல்ல கல்வெட்டுகளின் தேடலில் அன்னாரின் பங்களிப்பு அளப்பரியது. க.தம்பிராசா, கலாநிதி செ.குணசிங்கம் ஆகியோரின் கூட்டுமுயற்சியினால் கந்தளாய் சிவன்கோயில் கல்வெட்டு, பெரியகுளம் கல்வெட்டு, மாங்கனாய் கல்வெட்டு, தம்பலகாமம் ஐயனார் கோயிற்திடல் கல்வெட்டு, மாரியம்மன் கோயில் கல்வெட்டு, பாலமோட்டைக் கல்வெட்டு, திருகோணமலைக் கல்வெட்டு, கிளிவெட்டிக் கல்வெட்டு, திருகோணமலை பத்திரகாளி கோயில் கல்வெட்டு ஆகியவற்றின் ஆராய்ச்சி தமிழர்களின் இந்து சமயத்தின் வரலாற்றுத் தொன்மையை, பாரம்பரியத்தை நிறுவும் சான்றுகள் ஆயின.

கல்வெட்டுத் தேடலில் ஈடுபட்ட தம்பிராசா அவர்கள் பத்திரகாளி கோயில் கல்வெட்டுபற்றிய செய்தியை கலாநிதி செ.குணசிங்கத்துக்கு 1972 ஜூன் மாதம் அறிவித்தார். இக்கல்வெட்டு பத்திரகாளி கோயில் சந்நிதான மண்டபத்தில் தூணாக நிறுத்தப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் அறிவித்தார். பத்திரகாளி கோயில் ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீ சு.கு. சோமாஸ்கந்த ஐயர் அவர்களின் அனுமதியுடன் திரு. தம்பிராசாவின் ஏற்பாட்டில் கலாநிதி செ.குணசிங்கம், பேராசிரியர் கா.இந்திரபாலா ஆகிய இருவரும் அக்கோயிலில் சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இக்கோயில் கல்வெட்டுபற்றி கலாநிதி செ.குணசிங்கம் பின்வருமாறு கூறுகிறார்:-

'பத்திரகாளி கோயில் நிருத்த மண்டபத்தில் வலதுபுறத் தூணொன்றில் கல்வெட்டு எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு இருந்தன. அத்தூண் 9அடி 2அங்குலம் நீளமும், 9 அங்குல அகலமும் உடையது. 1972 ஆம் ஆண்டில் இக் கல்வெட்டை முதற் தடவையாகப் பார்வையிட்டபோது இத் தூணில் மூன்று பக்கங்களில் இருந்த கல்வெட்டையே கவனிக்க முடிந்தது. காரணம் கல்வெட்டின் மற்றைய பகுதி சுவரிடையே வைத்துக்கட்டப்பட்டு இருந்தது. தூணின்மேல் பூசப்பட்டிருந்த மைப் பூச்சினை மிகுந்த சிரமத்துடன் அகற்றிக் கல்வெட்டின் மைப்பிரதியினை எடுத்துப் பார்த்தோம்.

தெளிவாகக் காணப்பட்ட எழுத்துக்ளை மிகநுணுக்கமாக அவதானித்தபோது கல்வெட்டு கிழக்குப் பகுதியில் ஆரம்பித்துத் தெற்கு, மேற்குப் பகுதிகளில் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருந்தது. கிழக்குப் பகுதியில் 37 வரியெழுத்துக்களும், தெற்குப் பகுதியில் 36 வரியெழுத்துக்களும், மேற்குப் பகுதியில் 37 வரியெழுத்துக்களும் காணப்பட்டன. கல்வெட்டில் காணப்பட்ட எழுத்துக்கள் சீரானமுறையில் காணப்படவில்லை. சில எழுத்துக்கள் பெரிதாகவும்,



சில எழுத்துக்கள் சிறிதாகவும் காணப்பட்டன. வரிகளும் நேரான முறையில் எழுதப்பட்டு இருக்கவில்லை.

தூணின் மூன்று பகுதிகளிலும் கிடைத்த கல்வெட்டுப் பகுதி முதலாம் ராஜராஜனின் மகனாகிய முதலாம் ராஜேந்திரனின் (1012


அம்மன்சிலை

கி.பி. - 1044 கி.பி.) மெய்கீர்த்திப் பகுதியாகும். மெய்க்கீர்த்தி என்பது அரசர்கள் தமது காலத்தில் தாம்மேற்கொள்ளும் வெற்றிகரமான படையெடுப்புகளையும், தம்கால வீரம்மிக்க நிகழ்ச்சிகளையும் குறிப்பிடுகின்ற பகுதியாகும். இவ்வாறு, தமிழ்நாட்டில் தமிழ்கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்திப் பகுதிகளைச் சேர்த்துக் கொள்ளும் வழக்கத்தை முதன்முதலாக ஆரம்பித்து வைத்தவன் முதலாம் ராஜராஜசோழன் என்பது குறிப்பிடத்தக்கது. மெய்க்கீர்த்திக்குப் பின்னரே கல்வெட்டுப் பொறிப்பதற்கான நோக்கங்கள், பிற விவரங்களும் எழுதப்படும். ஆரம்பத்தில் எமக்குக் கிடைத்தபகுதி மெய்க்கீர்த்திப் பகுதியே. பின்னர் இக்கல்வெட்டின் நான்காவது பகுதியையும் பார்க்க நேர்ந்தது.

இக்கோயிலுக்குச் சேர்ந்ததான தூண் கல்வெட்டினை அதன் எழுத்து வளர்ச்சியின் அடிப்படையிலும், அதுகூறும் பொருளின் அடிப்படையிலும் நோக்குமிடத்து அக்கல்வெட்டு இற்றைக்கு ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பொறிக்கப்பட்டதாகும்.

இக்கல்வெட்டு கோயிலொன்றுக்குக் கொடுக்கப்பட்ட தானத்தைப் பற்றியும், அதன் எல்லைகள் பற்றியும் குறிப்பிடுவதாகத் தெரிந்தாலும் அது எந்தக்கோயில் என்பதனை அறியமுடியாமல் இருக்கிறது. இக்கோயிலின் காலம் சம்பந்தமாக எமக்குத் தெளிவாகக் கிடைக்கின்ற அதிமுக்கிய சான்று,

இக்கோயிலில் காணப்படும் உல்லிலில் (தேங்காய் உரிக்கும் கல்) பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டாகும். அந்தக் கல்வெட்டின் வாசகம் வருமாறு:

**'உ. காளி அம்மனுக்கு**
**ஆயி செம்புலிங்கம்**
**செய்து கொடுத்தது**
**1878 தை ஆசாரி'**

இக்கோயிலில் நடைபெறும் பிரதான விழாக்களில் சிறப்பிடம்பெறும் அம்மன் விக்கிரகம், அது இருந்த கிடாரம் ஆகியவற்றையும் அவதானித்தோம். செப்புக் கிடாரத்தின் வடிவமைப்பினையும், உலோக வார்ப்பு முறையினையும் அவதானிக்கையில் அது மிகப்பழைமை வாய்ந்ததாகவே காணப்படுகிறது.

காளியம்மன் விக்கிரகத்தினுடைய வடிவமைப்பு ஏறத்தாழப் பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் தமிழகக் கோயில்களில் பேணப்பட்ட காளியம்மன் உருவங்களை ஒத்ததாகக் காணப்படுகிறது. இதன் கால எல்லையைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறமுடியாவிட்டாலும், அது மிகப் பழைமை வாய்ந்த விக்கிரகம் என்று கூறிக்கொள்ள முடியும்.'

இவ்வாறு ஆலய தொன்மை வரலாறு அறிந்த பக்தர்கள் எந்தன் தமிழ்ஆசான் கழகப் புலவர் பெ.பொ.சிவசேகரனாரின் பொருள்பொதிந்த பாடல்களைப் பாடியின்புறுவர்.

**தினமும் வலம்வந்து தென்கைலை யாளின்**
**திருவடியை**
**மனதிலிருத்தி மறைந்த பொருள்மீட்க**
**வந்துநிற்பார்**
**அனையே எடுத்தாரைக் கண்முன்னே**
**காட்டம்மா' என்றிரக்க**
**கனவில் வெளிவந்து காட்டுவாள் பத்திர**
**காளிஷ்யே!**
**அல்லும் பகலும் அருள்செய்வாள் நாவில்**
**அணியணியாய்ச்**
**சொல்லும் பொருளும் தருவாள் சுரு**
**திச் சுடரொளியாள்**
**நெல்லும் தருவாள் நிலமுந்தருவாள்**
**நினைந்தவர்க்கே**
**கல்லுங் கரையக் கனிவிப்பாள் பத்திர**

தொடரும்....


கல்வெட்டு தேடல் வல்லான் தம்பிராசா

# ஹெரோயினுடன் இருவர் கைது

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை மாலை 6 மணியளவில் ஹெரோயினுடன் இருவர் கைது செய்யப்பட்டனர் எனத் துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை கடற்படையினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் துறைமுக பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஹெரோயினுடன் இருவரைக் கைது செய்தனர் என துறைமுக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 4 கிராம் 900 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட ஹெரோயின் பிரிதொரு நபருக்கு விற்பனைக்காக கொண்டுவரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் 4 ஆம் கட்டை, கண்டி வீதியைச் சேர்ந்த 23 நபரும், ஜயசுந்தர மாவத்தை, 5 ஆம் கட்டை, கண்டி வீதியைச் சேர்ந்த 23 வயதுடையவர்கள் என துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயினையும் திருகோணமலை நீதிமன்றத்தில் ஒப்படைத்து வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்வதாக துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

# டக்ளஸின் கௌதாரிமுனை விஜயம்; நாளாந்த பஸ் சேவைகள் அதிகரிப்பு



பூநகரி கௌதாரிமுனைக்கு கடந்த புதன்கிழமை விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிய பரிந்துரை காரணமாக கௌதாரிமுனைக்கான நாளாந்த பஸ் சேவை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பூநகரியில் இருந்து கௌதாரிமுனைக்கு இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் காலை மற்றும் மாலை என இரண்டு சேவைகளை வழங்கி வந்தது.

இதனால், கௌதாரிமுனை மக்கள் பல்வேறு போக்குவரத்து அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இதுதொடர்பாக, பிரதேச மக்களால் கடற்றொழில்அமைச்சரின்கவனத்துக்குக்கொண்டு வரப்பட்டது.

உடனடியாக இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய முகாமையாளர் குணபாலசிங்கத்துடன் தொடர்பு கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கௌதாரிமுனைக்கான பகல் சேவை ஒன்றை வழங்குவதற்கு மேற்கொண்ட பரிந்துரைக்கு அமைய, இன்று முதல் பூநகரி மற்றும் கௌதாரிமுனைக்கு இடையில் பகல் பஸ் சேவைகள் நடைபெறவுள்ளன.

## தமிழ் ஊடகத்துறையின்.....

**(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

அந்தத் தண்டனை அறிவிப்புத் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் முடிந்து கைதிகளை வெலிக்கடைக்குக் கூட்டிச் செல்லத் தயாரானார்கள். நீதிமன்றக் கட்டடத்துக்கு அருகில் கைதிகளை ஏற்றிச் செல்லும் வாகனம் வந்து நிற்கின்றது. சிறைக் காவலர்கள், இராணுவத்தினர் சூழ கைதிகள் மூவரும் – குட்டிமணி, ஜெகன், கறுப்பன் – கூட்டி வரப்பட்டனர். பாதை ஓரத்தில் மனம் கலங்கிய நிலையில் நான் பார்த்துக் கொண்டு நின்றேன். எங்கள் அலுவலக படைப்பிடிப்பாளரும் அன்று வந்திருந்தார். சிங்களவரான அவர் எனக்குப் பக்கத்தில் நின்றார்.

பாதையில் ஏனைய கைதிகளுடன் பக்கத்துப் பக்கத்தில் நடந்து வந்து கொண்டிருந்த குட்டிமணி என்னைக் கண்டதும் விலகி என்னை நோக்கி நடந்து வந்தார். ஒரு பத்தடி தூரத்தில் நான் தள்ளி நின்றிருந்தேன். அவர் கைகள் இரண்டும் சேர்த்து விலங்கிடப்பட்டிருந்தன. என்னை நோக்கி அவர் நடந்து வருவதை சிறை அதிகாரிகளோ, படையினரோ தடுக்கவில்லை.

வந்தவர் என் கைகள் இரண்டையும், விலங்கிடப்பட்டு ஒன்று சேர்ந்திருந்த தமது கைகளினால் பற்றினார். *“பிரிவோம்; சந்திப்போம்!”* என்று இரண்டு வார்த்தைகள்தான் பேசினார். நான் கண்ணீர் மல்க தலையாட்டினேன். அவரின் கண்களும் பனித்திருந்தன.

என் கண்கள் பனித்தமைக்கு ஒரு காரணம் இருந்தது. சற்று நேரத்துக்கு முன்னர் நீதிமன்றத்தில் நடந்த சம்பவம்தான் அதன் பின்னணி. அது குறித்து நாளை விவரிப்பேன்.

அன்று குட்டிமணிக்கு மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து ‘பிரிவோம்; சந்திப்போம்’ என்று கூறி என்னிடம் இருந்து விடுபட்ட குட்டிமணி, அடுத்த ஜுலையில் வெலிக்கடை படுகொலையில் மோசமாக சித்திரவதை செய்யப்பட்டு, கண்கள் பிடுங்கப்பட்டு காவு கொள்ளப்பட்டார்.

அன்றைய மரண தண்டனைத் தீர்ப்புக்குப் பின்னர், வேறு வழக்குகளுக்காக குட்டிமணி நீதிமன்றுக்குக் கொண்டு வரப்பட்டாரா, அவரை நான் பிறகும் சந்தித்தேனா என்பவை எனக்கு நினைவில் இல்லை. அவை எல்லாம் சுமார் 39 வருடங்களுக்கு முன்னர் நடந்த சங்கதிகள்.

ஆனால் *‘பிரிவோம்; சந்திப்போம்’* என்று கூறிப் பிரிந்து போன அந்த ஜீவன், நிரந்தரமாக நம்மை விட்டுப் பிரிக்கப்பட்டு விட்டது என்பதுதான் நிதர்சனம். சிறைக்குள் தமக்கு மோசமான சித்திரவதைகள், கோரமான கொடூரங்கள் இழைக்கப்பட்டன என்று அந்த ஜீவன் திறந்த நீதிமன்றில் வெளிப்படையாகக் கூறியபோது சிங்கள தேசத்தின் நீதிமன்றங்கள் அந்த உண்மையைப் புறந்தள்ளி, பேரினவாத வெறிப்போக்கை வெளிப்படுத்தி நின்றன. கடைசியாக அதே ஈவிரக்கமற்ற, கொடூரமான முறையில் அவர் சிங்களச் சிறையில் கோரமாகக் கொல்லப்பட்டபோதும் சிங்களத்தின் நீதித் துறையால் அதற்கு நீதி செய்யவே முடியவில்லை என்பதுதான் துன்பியல் வரலாற்று உண்மையாக சரித்திரம் பதிந்துள்ளது.

**(வளரும்)**

# மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படும் கொரோனாவின் அறிகுறிகள்

மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் நித்திரையின்றி இருப்பார்களாயின் அது முதலாவது கொரோனா அறிகுறியாகக் கண்டறியப்படும் என உளவியல் மருத்துவ நிபுணர் நீல் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் அவர்கள், வழமையான செயற்பாடுகளில் இருந்து விலகி வேறு சில அறிகுறிகளையும் வெளிப்படுத்துவார்கள் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, அவர்கள் தொடர்பாக மருத்துவ ஆலோசனைப் பெற வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்துவதில் எந்தவிதச் சிக்கலும் இல்லை என்றும் உளவியல் மருத்துவ நிபுணர் நீல் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# வாகன அபராதங்கள் செலுத்த புதிய முறை

வாகன அபராதத்தை மின்னணு முறையில் செலுத்துதல் மற்றும் ஓட்டுநர்களுக்கான புள்ளிகளை வழங்கும் முறையை விரைவில் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

புள்ளிகள் வழங்கும் முறையை செயற்படுத்த சட்டங்கள் மற்றும் தரவு அமைப்புகள் இருக்கின்ற போதிலும் அதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், வீதிகளில் யாசகம் எடுப்பதை தடுத்து நிறுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

## ஜோசப் ஸ்டாலினின் கைதைக் கண்டித்து யாழில் இன்று போராட்டத்துக்கு அழைப்பு

யாழ்ப்பாணம் பஸ் நிலையம் முன்பாக இன்று (வெள்ளிக்கிழமை) கவனவீர்ப்பு போராட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டோரின் சட்டவிரோதக் கைது, கல்வியில் இராணுவமயமாக்கல், கல்வியைத் தனியார் மயப்படுத்தல் ஆகியவற்றுக்கு எதிராக இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை இலங்கை ஆசிரியர் சங்கம் நடத்தவுள்ளது.

அரசாங்கத்தின் அடக்குமுறை மற்றும் சர்வாதிகார போக்குக்கு எதிரான இப் போராட்டத்துக்கு ஆர்வமுடைய அனைவரும் கலந்துகொண்டு இந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்குமாறும் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்

# 13 வயது சிறுமி துஷ்பிரயோகம்; தந்தை உட்பட 5 பேர் கைது

நாவலப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 13 வயதுடைய சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அவரது தந்தை உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் மேலும் 6 பேர் கைது செய்யப்படவுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# அதிகளவான தொற்றாளர்கள் கம்பஹா மாவட்டத்தில் பதிவு

*கடந்த புதன்கிழமை இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களில் அதிகளவான தொற்றாளர்கள் கம்பஹா மாவட்டத்தில் பதிவாகி உள்ளனர் என கொவிட் 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.*

*இதற்கமைய கம்பஹா மாவட்டத்தில் புதன்கிழமை 235 கொவிட் தொற்றாளர்கள் பதிவாகி இருந்தனர்.*

*அத்துடன் கொழும்பு மாவட்டத்தில் 232 தொற்றாளர்களும் களுத்துறை மாவட்டத்தில் 157 தொற்றாளர்களும் பதிவாகி இருந்தனர்.*

*மேலும் இரத்தினபுரி மாவட்டத்தில் 111 பேரும், யாழ்ப்பாணத்தில் 81 பேரும், காலியில் 78 பேரும் கேகாலையில் 70 பேரும் மற்றும் மட்டக்களப்பில் 67 பேரும் தொற்றுக்கு உள்ளாகி இருந்தனர்.*

*அதனடிப்படையில் புதன்கிழமை நாட்டில் மொத்தமாக 1,540 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*அத்துடன் தொற்றுக்கு உள்ளானவர்களுள் 87 பேர் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.*

### 50 ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**491.விஜய்சேதுபதி**
**492.52, 74**
**493. ஒரு தடவை**
**494.களிறு**
**495.8/18 ஆம் கூட்டம்**
**496.அஸ்லெ பார்டி**
**497.மெஸ்ஸி**
**498.நியூட்டன் (N)**
**499.மாதவி**
**500.ஒப்புறவு**

## 14ஆம் திகதி வெளியான 50ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1.எம்.வர்ணபாலன் யாழ்ப்பாணம் (10 சரி)
2. எச்.ரிஸ்மியா - தெல்தொட்டை (9 சரி)
3.எஸ். சதுர்ஜினி - அல்வாய் (10 சரி)
4.க. அனுஷன் - ஏழாலை (10 சரி)
5. பி.ஸ்ருதி - மட்டக்களப்பு (10 சரி)
6. எஸ்.துவாரகா - மட்டக்களப்பு (10சரி)
7. ஐ. கார்த்திகன் - யாழ்ப்பாணம் (10சரி)
8.ஜே.வினோஜன் - குடத்தனை (10 சரி)
9.கே.ஸ்ரீதரன் - - கொழும்பு (9 சரி)
10.செ. ஸ்ரீஇராமச்சந்திரன் (10 சரி)
11.ஆர். மாலதி - உடுப்பிட்டி (7 சரி)
12.ஏ.துஷான் - நீர்வேலி (10சரி)

# யாழ். உள்ளிட்ட பல இடங்களில் 19 பேருக்கு டெல்டா தொற்றுறுதி

கொழும்பு, யாழ்ப்பாணம் உள்ளிட்ட நாட்டின் பல இடங்களில் 19 பேர் கொரோனா வைரஸின் டெல்டா திரிவுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பிலியந்தலை, கொழும்பு ஆகிய இடங்களில் டெல்டா திரிவுடன் கூடிய நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்., கிளிநொச்சிக்கும் பரவியது ஆபத்தான 'டெல்டா' திரிவு வைரஸ்

## உறுதிப்படுத்தியது சுகாதார அமைச்சு



உலக அளவில் அதிக ஆபத்து வாய்ந்தது என்று கருதப்படும் இந்தியாவின் திரிவு வைரஸான 'டெல்டா' யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கும் பரவியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலை சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஹேமந்த ஹேரத் வெளியிட்டுள்ளார்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவரின் கருத்தின் அடிப்படையில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கொழும்பு, பிலியந்தல உட்பட்ட பகுதிகளில் 19 பேருக்குக் குறித்த வகை வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையில் இதுவரையில் குறித்த 'டெல்டா' வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 39 ஆக அதிகரித்துள்ளது.

## சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில்

# கூட்டமைப்புடன் அமெரிக்கத் தூதுவர் அரசியல் தீர்வு குறித்து முக்கிய பேச்சு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினருடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் தலைமையிலான குழுவினர் நேற்று முக்கிய பேச்சு நடத்தியுள்ளனர்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லலத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது அரசியல் தீர்வு தொடர்பில் நீண்ட நேரம் பேசப்பட்டது எனக் கூட்ட மைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அத்துடன் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் உள்ளிட்ட பரந்துபட்ட விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப் பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் பங்கேற்றிருந்தார்.

# பருத்தித்துறையில் தேர்த் திருவிழாவில் பங்கேற்ற கொரோனாத் தொற்றாளர்கள்

## தீர்த்தத் திருவிழாவில் பக்தர்களுக்குத் தடை

**(பருத்தித்துறை நிருபர்)**

பருத்தித்துறை, ஜூலை 17

யாழ். வடமராட்சி, பருத்தித்துறை சிவன் கோயில் தேர்த் திருவிழாவில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களும் பங்கேற்றமை உறுதி செய்யப்பட்டுள் ளதை அடுத்து நேற்று தீர்த்த திருவிழாவில் பக்தர்கள் பங்கேற்க சுகாதாரப் பிரிவினரால் தடை விதிக்கப்பட்டது.

இது குறித்து தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

பருத்தித்துறை நகரில் அமைந்துள்ள சிவன் கோயில் வருடாந்தத் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

ஆரம்பத்தில் பக்தர்கள் பங்கேற்பின்றி திருவிழாக்கள் நடைபெற்று வந்த நிலையில் ஆலயத் திருவிழாக்களை 150 பேருடன் நடத்தலாம் என்று திருத்தப்பட்ட சுற்றறிக்கை வெளிவந்ததை அடுத்து தேர்த்திருவிழா பக்தர்கள் பங்கேற்புடன் நேற்றுமுன்தினம் நடைபெற்றிருந்தது.

இந்நிலையில், பருத்தித்துறை முதலாம், 2ஆம், 3ஆம் குறுக்குத்தெருவில் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளியாகி இருந்தன. இதன்போது குறித்த பகுதிகளில் 19 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் சிலர் பருத்தித்துறை சிவன் கோயில் தேர்த்திருவிழாவில் பங்கேற்றிருந்தமை உறுதி செய்யப் பட்டுள்ளது.

இதையடுத்தே, சிவன் கோயில் தீர்த்தத் திருவிழாவில் பக்தர்கள் பங்கேற்க பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினாரால் தடை விதிக்கப்பட்டது.

இது குறித்த அறிவுறுத்தல் புதன் இரவு 10 மணியளவில் ஆலய நிர்வாகத்துக்கு சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்டுள் ளது.

இதன்காரணமாக நேற்று தீர்த்தத் திரு விழா ஆலய பூசகர்கள், நிர்வாகத்தினர் மட்டும் பங்கேற்கும் வகையில் ஆலயத்துக்குள்ளே நடத்துவதற்குச் சுகாதாரப் பிரிவினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட நபர்கள் பங்கேற்ற தேர்த்திருவிழாவில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை பொதுச்சந்தையில் 5 பேருக்குக் கொரோனாத் தொற்று

## சந்தையை மூடுவது தொடர்பில் ஆராய்வு

**(பருத்தித்துறை நிருபர்)**

பருத்தித்துறை பொதுச் சந்தை மற்றும் அதனை அண்டிய சந்தை மேற்கு பகுதியில் கொரோனாத் தொற்று இருக்கலாம் எனும் சந்தேகத்துக்கிடமானோரிடம் நேற்று முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் ஐவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களில் மூவர் சந்தை வியாபாரிகள் என்றும், இருவர் சந்தை மேற்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர் .

அதனால் பருத்தித்துறை பொதுச் சந்தையை தற்காலிகமாக மூடுவதா அல்லது கட்டுப்பாடுகளுடன் இயங்க அனுமதிப்பதா என்பது தொடர்பில் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

# மின்சாரம் தாக்கி சிறுவன் மரணம்

மட்டக்களப்பு மாவட்டம், சின்ன ஊறணிப் பகுதியில் மின்சாரம் தாக்கி 6 வயது சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

சின்னஊறணி 3 ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த தரம் 2 இல் கல்வி கற்கும் 6 வயதுடைய விநாயகம் விதுஷன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

வீட்டு நிர்மாணப் பணிகளின்போது தவறுதலாக மின்சார வயர் ஒன்றை சிறுவன் பிடித்ததையடுத்து, மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகியுள்ளான்.

பின்னர் உறவினர்கள் சிறுவனை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற நிலையில் அவன் உயிரிழந்துள்ளான்.

மட்டக்களப்பு நீதிவானின் உத்தரவை யடுத்து சிறுவனின் சடலம் பிரேத பரிசோத னைகள் மேற்கொள்ளப்பட்டு உறவினர்க ளிடம் ஒப்படைக்கப்பட்டது.

# ஆசிரியர்களை அவமதித்த கெஹலிய பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும்!

## இராதாகிருஷ்ணன் எம்.பி. வலியுறுத்து

ஆசிரியர்கள் தொடர்பில் அவதூறாகக் கருத்துரைத்த ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, ஆசிரியர்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண் டும்.

- இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி. வலியுறுத்தினார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு -

கொரோனா வைரஸ் தொற்றால் பாடசாலைகள் முடங்கியுள்ள சூழ்நிலையில், தங்களை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டு தொழில்நுட்ப உதவியோடு மாணவர்களுக்கான கல்வியை ஆசிரியர்கள் மிகவும் அர்ப்பணிப்போடு முன்னெடுத்து வருகின்றார்கள்.

இந்த வகுப்புகளை முன்னெடுக்கின்ற போது அவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனினும், மாணவர்களின் நலனைக் கருதி பணியாற்றி வருகின்றனர். இவ்வாறு அர்ப்பணிப்புடன் தங்களுடைய கடமைகளை செய்து கொண்டிருக்கின்ற ஆசிரியர்களை அவமதிக்கும் வகையில், அவதூறாக அமைச்சர் கருத்து வெளியிடுகனஙறமை வெறுக்கத்தக்க, கண்டிக்கத்தக்க விடயமாகும். எனவே, இந்த விடயம் தொடர்பாக அமைச்சர், ஆசிரியர் சமூகத்திடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும்.

நேற்று ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற நிலைமை நாளை ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்படலாம். எனவே, இன்று ஆசிரியர்களுக்கு எதிராகக் கருத்து தெரிவித்திருக்கின்ற அமைச் சருக்கு எதிராக பெற்றோர்கள் தங்களுடைய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

காலைக்கதிர் Kalaikkathir

# மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிக்கு ஒருவர் ஆட்கொணர்வு மனு

பௌத்த துறவி ஒருவர் கடந்த புதன்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்துள்ளார்.

தேசிய பிக்கு முன்னணியின் ஊடக செயலாளர் கொஸ்வத்த மகாநாம தேரரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் என கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரரான தங்கல்ல சாரத தேரர், தமது மனுவில், பொலிஸ் அதிபர் சந்தன விக்ரமரத்ன, சிரேஷ்ட பொலிஸ் அதிபர் தேசபந்து தென்னகூன், தலங்கம காவல் நிலைய பொறுப்பாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தன ஆகியோரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளார்.

உத்தேச கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக யோசனைக்கு எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜூலை 8 ஆம் திகதி பத்தரமுல்ல சந்தியில் கூடியிருந்தனர்.

இதன்போது எதிர்ப்பாளர்கள் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் முகக் கவசங்களை அணிந்து ஒரு மீற்றர் தூரத்தில் வரிசையாக நின்றனர் என மனுதாரர் தெரிவித்துள்ளார். இந்தநிலையில் முற்பகல் 11 மணியளவில், ஒரு குழுவினர் எதிர்ப்பாளர்களைக் கலைக்க அதிகப்படியான சக்தியைப் பயன்படுத்தினர். அத்துடன் ஆட்கொணர்வு மனுவில் கூறப்பட்டவர் உட்பட்ட சுமார் 30 பேரை கைது செய்தனர்.

இதன்பின்னர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் பிணையில் அனுமதிப்பட்ட ஆட்கொணர்வு மனுவில் குறிப்பிடப்படும் தேரர் மற்றும் பலர் சுகாதார அதிகாரிகள் அல்லது அன்டிஜென் சோதனை அல்லது பி.சி.ஆர்.சோதனை இல்லாமல் முல்லைத்தீவில் உள்ள தனிமைப்படுத்தப்பட்ட மையத்திற்கு வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டதாக மனுதாரர் தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

# மேலும் 20 லட்சம் சினோபாம் அடுத்த வாரம் இலங்கைக்கு

இலங்கைக்கு எதிர்வரும் வாரமளவில் மேலும் 20 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் கடந்த புதன்கிழமை டுவிட்டரில் பதிவிட்டுள்ளது.

இந்த தடுப்பூசிகளுடன் சேர்த்து இதுவரையில் மொத்தமாக சீனாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட சினோபோர்ம் தடுப்பூசிகளின் எண்ணிக்கை 91 லட்சமாக அதிகரிக்கும் என சீனத் தூதரகம் தெரிவத்துள்ளது.




# தவறான முடிவுகளால் பொதுமக்கள் வீதியில்

## சாள்ஸ் எம்பி குற்றச்சாட்டு



தமது சொந்த நலனுக்காக ஒரு சில அதிகாரிகள் எடுக்கும் தவறான முடிவுகளால் மக்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா புதியசின்னப்புதுக்குளம் பகுதியில் செயற்பட்டு வரும் கற்குவாரியால் அந்த பகுதி மக்கள் பல்வேறு ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இது தொடர்பாக கடந்த புதன்கிழமை அந்தக் கிராமத்துக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர், பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடி விட்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

குறித்த பகுதியில் உள்ள கற்குவாரியால் கிராம மக்கள் பல்வேறு உளவியல் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இந்தப் பகுதி மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். எனவே, இந்த மக்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாகும் விதத்தில் இந்த கற்குவாரி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மக்கள் நலன்சார்ந்து துறைசார்ந்த அதிகாரிகள் செயற்படாமையே இதற்கு முக்கிய காரணம். தங்களுடைய சொந்த நலனுக்காக ஒருசில அதிகாரிகள் எடுக்கும் தவறான முடிவுகளால் மக்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய சூழல் இருக்கிறது.

அப்படியான ஜனநாயக போராட்டங்களைக் கூட கொவிட் தடுப்பு சட்டங்களைக் காட்டி அரசாங்கம் ஒடுக்கி வருகின்றது. குறித்த காணிக்கான உரிமையாளர் உரிமை பத்திரத்தையும் வைத்திருக்கும் நிலையிலும் குறித்த காணி கற்குவாரிக்காக வழங்கப்பட்டுள்ளது.

இது மக்களின் வாழ்வையும், வாழ்வாதாரத் தையும் மிகவும் பாதிக்கின்றது. இதனை நிறுத்துவதற்கு அரசும் துறைசார் அதிகாரிகளும் முழுமையாக செயற்பட வேண்டும். அத்துடன் நிதி அமைச்சராக பதவி ஏற்றுள்ள பஸில் ராஜபக்ஷ கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் முதல் தற்போதுவரை அரசாங்கத்தின் முக்கிய பதவிகளில் செயற்பட்டிருந்தார்.

அவருடைய நிர்வாகத்திலேயே அரசின் சகல செயற்பாடுகளும் இடம்பெற்றிருந்தன. அவர் தற்போது நிதி அமைச்சராகப் பதவி ஏற்றிருப்பதால் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்கமுடியும் என்று நான் நம்பவில்லை.

இலங்கையின் பொருளாதாரத்தை நிமிர்த்த வேண்டுமாக இருந்தால் ஜனாதிபதி முதல் அரசாங்கத்தை சார்ந்தவர்கள் தமது சுயநல அரசியலைக் கைவிடவேண்டும், பணம் உழைப்பதை விடுத்து மக்கள் நலன்சார்ந்து சிந்தித்தால் மாத்திரமே அது சாத்தியமாகும்.

2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இறக்குமதி செய்யப்பட்ட சீனியில் மிகப்பெரிய பணத்தைப் பெற்றதாக ஜனாதிபதி மீது குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. அவர் மீதே இப்படி குற்றச்சாட்டுக்கள் இருக்கும் போது அவரது பிள்ளைகள் மருமக்கள், உறவினர்கள் அமைச்சர்களாக இருக்கும் போது நாட்டை முன்னேற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

அரசில் தனிப்பட்டவர்களின் செயற்பாடு காரணமாக தமிழ் மக்கள் மாத்திரமல்ல சிங்கள மக்களும் பட்டிணிசாவை எதிர்கொள்ளும் மிகப்பெரிய ஆபத்தை எதிர் நோக்கியுள்ளனர்.
– என்றார்.

# உதைபந்தாட்டத்தில் பிரித்தானியா தோல்வி கதறிக்கதறி அழும் ஈழத்துச் சிறுவன் ஒருவன்

லண்டன் வெம்ப்லி ஸ்டேடியத்தில் நடைபெற்ற ஐரோப்பிய கால்பந்து சம்பியன்ஷிப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இத்தாலி – இங்கிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தியிருந்தன.

ஆட்ட நேரம் முடிவில் இரு அணிகளும் 1 : 1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்ததால், போட்டியின் முடிவுக்காக கூடுதலாக 30 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டன. அப்போதும் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

இதனால் வெற்றியை நிர்ணயம் செய்ய ஆட்டம், பெனால்டி ஷூட் – அவுட் முறைக்குச் சென்றது. பரபரப்பின் உச்சிக்கு சென்ற பெனால்டி ஷூட் ஆட்டத்தில் இத்தாலி அணி 3:2 என்ற கோல் கணக்கில் பிரிட்டனை வீழ்த்தி 53 ஆண்டுகளுக்கு பின்னர் கோப்பையைக் கைப்பற்றியது. முதல்முறையாக இறுதிப்போட்டிக்கு முன் னேறி இருந்த பிரிட்டன் அணி, சொந்த மண் ணில் கோப்பையை வெல்லும் அரிய வாய்ப்பைக் கோட்டை விட்டது.

இந்நிலையில், உதைபந்தாட்டத்தில் பிரித்தானியா தோல்வி அடைந்ததால் ஈழத்து சிறுவனொருவன் கதறி அழும் காட்சி தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றது.

# இராணுவ மர்மப் பொருள்கள் முள்ளிவாய்க்கால் பகுதியில் மீட்பு



முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் தனியார் காணி ஒன்றைம் துபபுரவு செய்யும் போது இராணுவ மர்ம பொருள்கள் சில அடையாளம் காணப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தனியார் காணி உரிமையாளர் ஒருவர் நேற்று (புதன்கிழமை) தனது காணியைத் துப்புரவு செய்த போது குறித்த மர்ம பொருள்கள் மண்ணில் புதைத்திருந்த நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பொலிஸாருக்கும் அருகில் உள்ள படையினருக்கு காணி உரிமையாளர் தகவல் வழங்கியதைத் தொடர்ந்து வெடிபொருள் அகற்றும் பிரிவினர் கிளிநொச்சியில் இருந்து வரவழைக்கப்பட்டு குறித்த பகுதி நீதிமன்ற அனுமதியுடன் நேற்று அகழப்பட்டது.

இதன் போது இராணுவ பயன்பாட்டுடன் தொடர்புடைய மர்ம பொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் விடுதலைப்புலிகள் பயன்படுத்திய ஒருவகையான வெடிபொருள்களாக இது இருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.07.2021 இல் வெளியிடப்பெற்றது.